KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 27 February 2026 இதழ்:- 08

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழம் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சுரேஷ் சலே கைது! 72 மணித்தியாலம் தடுப்பு!



அரச புலனாய்வுப் பிரிவு முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸார் தீர்மானித் துள்ளனர். முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தினால் 25 பெப் 2026 புதன்கிழமை பேலியகொட பகுதியில் வைத்து (24ம்பக்கம் பார்க்க)

## விசாரணைகளைக் குழப்ப வேண்டாம்!

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்க முயற்சிக்க வேண்டாம் என அருட்தந்தை சிறில் காமினி கோரிக்கை விடுத்துள்ளார். 26 பெப் 2026 இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (7ம் பக்கம் பார்க்க)

# தமிழக அரசியலில் சீமான் நடத்திய திருச்சி மாநாடு:- தேர்தல் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வருமா?

தமிழக அரசியலில் செந்தமிழன் சீமான் நடத்திய் திருச்சி மாநாடு போன்ற பெரிய கூட்டங்கள் இயல்பாகவே கவனத்தை ஈர்க்கும். குறிப்பாக இளைஞர்கள் உற்சாகமாகக் கூடினால், அது ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பெரிதாகத் தோன்றும். ஆனால் ஒரு முக்கியமான கேள்வி நமக்கு முன் நிற்கிறது. கூட்ட நெரிசல் தேர்தல் வெற்றியாக மாறுமா? அல்லது அது ஒரு அரசியல் உணர்ச்சி அலைவா?

சீமான் அவர்களின் அரசியல் பாணி, தீவிரமான சொற்களும் உணர்ச்சி மிக்க கோஷங்களும் மையமாகக் கொண்டது. தமிழ்த் தேசிய உணர்வு, மொழிப் பெருமை, இன அடையாளம் ஆகியவற்றை முன்னிறுத்தும் அவரது உரைகள் இளைஞர்களிடம் தீவிர எதிரொலியை உருவாக்குகின்றன. (6ம் பக்கம் பார்க்க)



# நாட்களைக் கடத்தும் ஆளும் கட்சியும் இடம் கொடுக்கும் தமிழ்க்கட்சிகளும்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தேசிய மக்கள் சக்தியும் தீர்வைத் தரப் போவதில்லை என்பது தெளிவாகியுள் ளது. எந்தப் பிரச்சினைக்கும் எந்தப் பதிலையும் உறுதியாகவோ வெளிப் படை யாகவோ சொல்லாமல் தந்திரமாக நாட்களைக் கடத்தும் ( 17ம் பக்கம் பார்க்க)

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
33 வது ஆண்டு விழா
விபரங்களுக்கு 5ம் பக்கம் பார்க்க

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

# புலம் பெயர் தேசங்களில் விடுதலைப்புலிகள் வலுவாக இருக்கும் நிலையில் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் வலுவானதாக இருக்க வேண்டும்

புலம்பெயர் தேசங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வேர்களாக இருக்கும் அமைப்புக்கள் வலுவாக இருக்கின்போது பயங்கரவாதம் குறித்த சட்டங்கள் பலவீனமாக இருந்தால் அவை மீண்டும் தலை தூக்குவதற்கான ஆபத்துக்கள் உள்ளதாக பேராசிரியர் ரொஹான் குணரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமானது வலுவானதாக இருக்க வேண்டும் என்பதோடு அது தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்துவதாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்' சர்ச்சைக்குரிய சட்ட வரைவானது ஐக்கிய நாடுகள் சபையின் முகவரகங்கள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உள்நாட்டு சிவில் அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டங்களின் அடிப்படையில் மேலதிக திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக வரைவு இறுதி செய்யப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் கருத்து வெளியிட்டுள்ள பேராசிரியர் ரொஹான் குணரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் நீண்டகால ஸ்திரத் தன்மைக்கு வலுவான சட்டங்கள் அவசியமாகும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் எக்காரணம் கொண்டும் நீர்த்துப் போகச் செய்யப்படக்கூடாது அரசியல் தலைவர்கள் ஆட்சிக்கு வருவதற்காகப் பேசும் சொல்லாடல்களுக்கு அப்பால் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அச்சுறுத்தல் தற்போது நிலத்தடியில் இருக்கும் புற்றுநோய் போன்றதாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். புலம்பெயர் தேசங்களில் அந்த அமைப்பின் வேர்களாக உள்ள வலையமைப்புகள் தற்போதும் வலுவாக இருக்கின்றன. அவ்வாறான நிலையில் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் பலவீனமான இருக்கும் போது அவை மீண்டும் தலைதூக்கக்கூடும் ஆபத்துக்கள் உள்ளன.

அதேநேரம், சர்வதேசத்துக்கு பயங்கரவாத அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய குழுக்களான அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ் ஆகியவற்றின் ஊடுருவல்களைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் தேவையாக உள்ளன. இணையவெளியின் ஊடாக முன்னெடுக்கப்படும் தீவிரவாதப் பிரசாரங்கள் மற்றும் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வலுவான சட்டங்களும் நவீன புலனாய்வுத் திறன்களும் அவசியமாகும்.

தற்போதைய நிலையில் நிறுத்தப்பட்டுள்ள புனர்வாழ்வுத் திட்டங்களை அரசாங்கம் உடனடியாக மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். மதத் தலைவர்கள் சதித்திட்டக் கோட்பாடுகளைப் பரப்பாமல் இருப்பதோடு தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

இதேவேளை அரசாங்கத்தினால் புதிதாக முன் மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவானது பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் காணப்பட்ட முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலும், சர்வதேச சட்டத்துக்கு முழுவதும் ஏற்புடைய விதத்திலும் அமையவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள் எழுவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கடிதம் மூலம் கூட்டாகத் தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை இப்புதிய வரைவு எவ்வாறு சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டதாகக் காணப்படுகிறது என்பது பற்றியும், இவ்வரைவு குறித்த பொதுக் கலந்துரையாடல் செயன் முறை சகலரையும் உள்ளடக்கியதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான முறையில் அமைவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் தமக்கு விளக்கமளிக்குமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

UNITED NATIONS
Human Rights


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# வடக்கில் தேசிய மக்கள் சக்தி கலூன்றியது எப்படி? ஆர்வத்துடன் கேட்ட பிரிட்டன் பிரதிஅமைச்சர் டேவிட்லமி

முன்னெப்போதுமில்லாத வகையில் சிங்கள தேசிய கட்சிகளில் ஒன்றான தேசிய மக்கள் சக்தி வடக்கில் காலூன்றுவதற்கு வழி வகுத்த பின்னணிக் காரணங்கள் குறித்து பிரித்தானிய பிரதி பிரதமர் டேவிட் லமி சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் ஆர்வமாகக் கேட்டறிந்துள்ளார்.



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு கடந்த வாரம் நாட்டுக்கு சென்றிருந்த பிரித்தானிய பிரதி பிரதமர் டேவிட் லமிக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் சிவில் சமூகத்தின் சார்பில் கலாநிதி அகிலன் கதிர்காமர், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சட்டத்தரணி ரணிதா ஞானராஜா, சட்டத்தரணி கௌதமன், பெண்கள் உரிமை செயற்பாட்டாளர் நபீலா இக்பால் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் போது 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் அவற்றிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள், சிறுபான்மையின மக்களின் உரிமைகள், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அதற்குப் பதிலீடாக முன்மொழியப்பட்டுள்ள புதிய வரைவு, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இன்னமும் உறுதிப்படுத்தப்படாமை, மாகாணசபைத்தேர்தல்களை நடாத்துவதில் தொடரும் காலதாமதம், புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தில் நிலவும் பின்னடைவு, முஸ்லிம் விவாக, விவகாரத்துச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை முன்னெப்போதுமில்லாத வகையில் சிங்கள தேசிய கட்சிகளில் ஒன்றான தேசிய மக்கள் சக்தி கடந்த தேர்தல்களின்போது வடக்கில் காலூன்றுவதற்கு வழிகோலிய காரணிகள் குறித்து பிரித்தானிய பிரதி பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டது. அதனை அவ்வப்போது கேள்விகள் எழுப்பி ஆர்வத்துடன் கேட்டறிந்த பிரதி பிரதமர் டேவிட் லமி, இம்மாற்றத்தின் வெவ்வேறு பரிமாணங்கள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

# வடக்கில் காணிகளை அரச காணிகளாக்கும் வர்த்தகமானிக்கு உயர்நீதிமன்றதில் சுமந்திரன் தாக்கல் செய்த மனுவுக்கு இடைக்காலத் தடை!



காணி நிர்ணய சட்டம் பிரிவு 4க்கு அமைவாக வடக்கில் காணிகளை அரச காணிகளாக்கி கையகப்படுத்துவதற்கான வர்த்தமானிக்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் தாக்கல் செய்த மனு 26 பெப் 2026 விசாரிக்கப்பட்ட பின்னர் குறித்த வர்த்தகமானியை தற்காலிகமாக வலு தற்றதாக்கும் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜீலை மாதம் 02 ஆம் திகதி இடம் பெறவுள்ள நிலையில், அதற்கிடையில் குறித்த வர்த்தமானியை மீள கைவாங்குவதற்கான வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டால் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, சம்பத் அபே கோன் மற்றும் சம்பத் விஜயரத்ன உள்ளிட்ட நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# இலங்கையில் பிறந்த பேராசிரியர் பாலி புலேந்திரன் தலைமையிலான குழுவினரால் சுவாசக் கருவி தடுப்பூசி கண்டு பிடிப்பு!



இலங்கையில் பிறந்த நோய் எதிர்ப்பு மண்டல ஆய்வாளர் பேராசிரியர் பாலி புலேந்திரன் (Bali Pulendran) தலைமையிலான ஸ்டான்போர்ட் மருத்துவக் குழுவினர், ஒரு புரட்சிகரமான 'யுனிவர்சல்' சுவாசக் கருவி தடுப்பூசியைக் கண்டு பிடித்துள்ளனர்.

மூக்கு வழியாகச் செலுத்தப்படும் இந்த தடுப்பூசி, கொரோனா வைரஸ் மற்றும் அதன் உருமாறிய வடிவங்களுக்கு எதிராக மட்டுமல்லாமல், அபாயகரமான பக்டீரியாக்கள் மற்றும் வீட்டில் தூசிகளால் ஏற்படும் ஒவ்வாமைகளுக்கும் எதிராகப் பாதுகாப்பு அளிக்கிறது.

வழக்கமான தடுப்பூசிகள் ஒரு குறிப்பிட்ட வைரஸை மட்டும் குறிவைக்கும். ஆனால், இந்தப் புதிய தடுப்பூசி நுரையீரலில் உள்ள நோய் எதிர்ப்பு மண்டலத்தின் தகவல் தொடர்பு சமிக்ஞைகளை தூண்டி, உடலின் இயற்கையான பாதுகாப்பு அமைப்பை நீண்ட காலத்திற்கு விழிப்புடன் வைத்திருக்கச் செய்கிறது.

எலிகளில் நடத்தப்பட்ட சோதனையில், இந்தத் தடுப்பூசி பல மாதங்கள் வரை நீடித்த பாதுகாப்பை வழங்கியது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது விஞ்ஞான இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் புலேந்திரன் இது தொடர்பில் தெரிவிக்கையில் இந்தத் தடுப்பூசி மனிதர்களுக்கான முதற்கட்டச் சோதனைகளுக்கு விரைவில் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவித்துள்ளார். நிதி உதவி மற்றும் சோதனைகள் வெற்றிகரமாக அமைந்தால், அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளில் இது பொது மக்களின் பயன்பாட்டிற்கு வரக்கூடும்.

'இது மருத்துவத் துறையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இலையுதிர்காலத்தில் ஒருமுறை இந்த நேசல் ஸ்ப்ரேயை எடுத்துக் கொண்டால், காய்ச்சல் கொரோனா மற்றும் பொதுவான சளி போன்ற பல நோய்களில் இருந்து ஒரே நேரத்தில் பாதுகாப்பு பெற முடியும்,' என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## தமிழரசு அரசியல் குழுவின் விபரம் கோரும் ஸ்ரீதரன்!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவுக்கு அறிக்கையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அரசியல் குழுவின் விவரங்களை தனக்கு அனுப்பி வைக்குமாறு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என தமிழரசு தலைமை வட்டாரங்களில் இருந்து நம்பகரமாக அறியவருகின்றது.

அந்தக் கடிதத்தில், அரசியல் குழுவின் வழி காட்டு விதிகள், ஒழுக்கக் கோவை என்பவற்றின் பிரதிகளை வழங்குமாறும் அவர் கோரியுள்ளார் என தெரிய வருகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அறிக்கையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உபகுழுக்களில் ஒன்றான அரசியல் குழுவின் விவரங்கள் குறித்து அறியும் வகையிலேயே சிறீதரன் அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார் என்றும் அறியக் கிடைத்தது.

அரசியல் குழுவின் வழிகாட்டு விதிகள், ஒழுக்கக்கோவை மற்றும் அண்மையில் நடைபெற்ற அரசியல் குழுக்கூட்டங்களின் அறிக்கைகள் ஆகியவற்றை தனக்கு அனுப்பி வைக்குமாறு கோரியே சிறீதரன் எம்.பி. தமிழ் அரசின் பதில் தலைவருக்கு இந்தக் கடிதத்தை





அனுப்பியுள்ளார் என்று தெரியவருகின்றது.

ஆயினும் தான் தனிப்பட்ட அலுவலாக வெளிநாட்டுக்குச் செல்வதால் குறித்த விவரங்களை கட்சியின் பொதுச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு பதில் அனுப்பியுள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க சாவகச்சேரி நகர சபையின் பொன் விழா மண்டபத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முதலாவது பேராளர் மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது. இவ் மாநாட்டின் ஆரம்பத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர்களால் மக்கள விளக்கு ஏற்றி ஆரம்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழ் தாய் பாட்டு பாடப்பட்டதுடன் இவ் மாநாட்டில் கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இவ் பேராளர் மாநாட்டில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இனைத் தலைவர்கள், கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்




# நலிவுற்றோர் நலம் பேண கை கொடுப்போம் வாரீர்!





AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
647.401.5800
647.594.9573
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR SCARBOROUGH, ONTARIO M1B 3J4 Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102 Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

Ontario அரச அங்கீகாரம் பெற்ற முதன்மை நிறுவனம் ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall, 1571 SANDHURST CIRCEL #159D (Finch & McCowan) Scarborough, ON
2613 EGLINTON AVE, (Brimley & Eglinton) Toronto, ON

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Outstanding Agent for Outstanding Results.
Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

PACELAW
Poorany Sornabala
Desmond Sornabala
Paralegal
Over 40 years of putting our clients first
Call Us Today
647-968-7059
Get In Touch
191 The West Mall Suite 1100 Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA
Licenced Funeral Pre-Planner
647-713-6049

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5%
2%
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave. E, Scarborough. ammapawnbroker@gmail.com

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

N.K.S DRAPERY & BLINDS FABRIC
Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

நந்தா NANTHA CATERS
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kipling & Steeles - 5010 Steeles Ave.
Call 416 NANTHA 1 • 416 626 8421

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203 Toronto ON M1B 3V9
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525

Santha Panchalingam
சாந்தா பஞ்சலிங்கம்
Board of Director
பணிப்பாளர்
416-200-5470
santha@tamilcentre.ca
www.tamilcentre.ca

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

# தமிழக அரசியலில் சீமான் நடத்திய திருச்சி மாநாடு:- தேர்தல் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வருமா?








தமிழக அரசியலில் செந்தமிழன் சீமான் நடத்திய் திருச்சி மாநாடு போன்ற பெரிய கூட்டங்கள் இயல்பாகவே கவனத்தை ஈர்க்கும். குறிப்பாக இளைஞர்கள் உற்சாகமாகக் கூடினால், அது ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பெரிதாகத் தோன்றும். ஆனால் ஒரு முக்கியமான கேள்வி நமக்கு முன் நிற்கிறது.

கூட்ட நெரிசல் தேர்தல் வெற்றியாக மாறுமா? அல்லது அது ஒரு அரசியல் உணர்ச்சி அலைவா?

சீமான் அவர்களின் அரசியல் பாணி, தீவிரமான சொற்களும் உணர்ச்சி மிக்க கோஷங்களும் மையமாகக் கொண்டது. தமிழ்த் தேசிய உணர்வு, மொழிப் பெருமை, இன அடையாளம் ஆகியவற்றை முன்னிறுத்தும் அவரது உரைகள் இளைஞர்களிடம் தீவிர எதிரொலியை உருவாக்குகின்றன.

ஆனால் தேர்தல் என்பது மேடைக் கைத் தட்டல்களின் போட்டி அல்ல. அது வாக்குச் சத வீதத்தின் கணிதம். ஒரு மாநாட்டில் பத்தாயிரம் பேர் கூடலாம் ஆனால் அதே மக்கள் தேர்தல் நாளில் வாக்களிப்பார்களா? வாக்களித்தாலும் அது ஆட்சியை நிர்ணயிக்கும் அளவுக்கு போதுமா?

தமிழகத்தில் அரசியல் போட்டி நீண்ட காலமாக பெரிய கட்சிகளின் வலுவான அமைப்பு, கூட்டணிகள், சமூக அடிப்படை மற்றும் பொருளாதார வாக்குறுதிகள் போன்றவற்றைச் சுற்றி இயங்குகிறது. ஒரே உணர்ச்சி அலை, நிரந்தர அரசியல் சக்தியாக மாற வேண்டுமெனில் அமைப்பு, கூட்டணி மற்றும் பரந்த சமூக ஏற்றுக் கொள்ளுதல் அவசியம்.

சீமான் அவர்களின் அரசியல் உரைகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கும் உயர்ந்த இடம் உண்டு. இங்கு நம்மால் உணர வேண்டிய ஒரு நுணுக்கம் உள்ளது.

இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்டம் என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. ஆனால் இந்திய அரசியலின் சட்ட பூர்வ சூழலில், அந்த இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பாகப் பார்க்கப் படுகிறது.

தமிழக வாக்காளர்கள் பெரும்பாலும் தங்களது நாளாந்த வாழ்வாதாரம், வேலை வாய்ப்பு, கல்வி, விலை உயர்வு, நலத்திட்டங்கள் போன்றவற்றின் அடிப்படையில் வாக்களிக்கிறார்கள். ஒரு பகுதி இளைஞர்களுக்கு புரட்சித் தீவிரம் ஈர்ப்பாக இருக்கலாம் ஆனால் குடும்ப வாக்காளர்கள் நிலைத்தன்மை, நிர்வாக திறன், பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை முதன்மைப்படுத்துவார்கள்.

அதனால் விடுதலைப்புலிகள் கோசம் முழு தமிழக அரசியலைத் தீர்மானிக்கும் என்று கருதுவது நிஜ அரசியல் கணக்கீட்டை எளிமைப்படுத்தி விடும். இளைஞர்களின் உணர்ச்சி என்பது அரசியலில் சக்தி. ஆனால் உணர்ச்சி மட்டும் போதாது. அது அறிவால் வழி நடத்தப்பட வேண்டும். ஒரு கூட்டத்தில் நீங்கள் உணரும் அதிர்வு, தேர்தல் பெட்டியில் எண்ணிக்கையாக மாற வேண்டுமெனில் பரந்த சமூக ஆதரவு தேவை. நடைமுறை அரசியல் திட்டங்கள் தேவை. சட்டபூர்வ நிலைப்பாடுகள் தெளிவாக இருக்க வேண்டும். பொருளாதார மற்றும் நிர்வாகத் திறன் நிரூபணம் அவசியம்.

கோஷம் ஒரு தலைமுறையைத் தூண்டலாம். கொள்கை தான் ஒரு சமூகத்தை மாற்றும். கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களில் சிலர் தமிழ்த் தேசிய அரசியலை உணர்ச்சி ரீதியாக ஆதரிப்பது இயல்பு. தாயகத்தின் வேதனைகள் மறக்கப்பட முடியாது. ஆனால் தமிழக அரசியல், இலங்கைத் தமிழர் விடுதலைப் போரா ட்டத்தின் நீட்சி அல்ல. அது இந்திய அரசியலமைப்பின் கீழ் இயங்கும் ஒரு மாநில அரசியல் அமைப்பு. எனவே புலம்பெயர் சமூகங்கள் செய்ய வேண்டியது உணர்ச்சி ஊக்கத்தை அளிப்பது மட்டுமல்ல. கல்வி, பொருளாதாரம், தொழில் முனைவோர் ஆதரவு, மனித உரிமை விழிப்புணர்வு போன்ற நடைமுறை தளங்களில் பங்களிப்பது.

ஒரு இயக்கத்தை வெளிநாட்டிலிருந்து கோஷம் கொடுத்து முன்னெடுப்பது எளிது. அதை உள்ளூரில் சட்ட பூர்வமாக, நிலைத்த முறையில் கட்டியெழுப்புவது கடினம்.

தமிழகத்தில் தேர்தலை தீர்மானிப்பவை சமூகக் கூட்டணிகள் பொருளாதார வாக்குறுதிகள் ஆட்சித் திறன் மீதான நம்பிக்கை மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பு

ஒரு மாநாட்டின் வெற்றி அரசியல் வளர்ச்சிக்கான அடையாளமாக இருக்கலாம். ஆனால் அது இறுதி முடிவாகக் கருதப்பட முடியாது. உணர்ச்சி அரசியலை எழுப்பும். ஆனால் நிர்வாகம் அதை நிலை நிறுத்தும்.

இளைஞர்களே உங்களின் ஆற்றல் மிகப் பெரிய சக்தி. அதை வெறும் கோஷமாக வீணாக்க வேண்டாம். அதை அறிவோடு, திட்டமிடலோடு, சட்டபூர்வ அரசியல் செயல்பாடுகளோடு இணைத்தால் தான் அது தலைமுறைகளை மாற்றும்.


புலம்பெயர் உறவுகளே! நமது தேசத்தின் பற்றைக் கைவிடாதீர்கள். ஆனால் அரசியல் ஆதரவை அளிக்கும் போது, உணர்ச்சியுடன் சேர்த்து நிஜ அரசியல் கணக்கு களையும் கவனியுங்கள்.

கூட்டம் ஒரு காட்சி. வாக்கு தான் தீர்ப்பு.

– ஆதிசங்கரன்

# டில்வின் சில்வாவின் கருத்துத் தொடர்பில் சுரேஷ் சந்தேகம்?





இந்திய விஜயத்தின்போது 13 ஆவது திருத்தம் குறித்தோ, அதிகாரப்பகிர்வு குறித்தோ பேசப்படவில்லை என தேசிய மக்கள் சக்தி கூறுவதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது என்று எமக்குத் தெரியாது. ஆனால் இந்தியாவின் வலியுறுத்தலுக்கு அப்பால் மாகாணசபைத் தேர்த்லை விரைந்து நடாத்த வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு இருக்கிறது என ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.


அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதுவும் பேசப்பட வில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றிக் கருத்துரைத்த சுரேஷ் பிரேமசந்திரன், வழமையாக இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களின் போது அழுத்தமாகவும், அன்றேல் மேலோட்டமாகவேனும் இவ்விடயங்கள் குறித்து இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கும் நிலையில், இம்முறை இது பற்றிப் பேசப்படவில்லை என அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கூறுவது எந்தளவுக்கு உண்மையாக இருக்கக்கூடும்? என சந்தேகம் வெளியிட்டார்.

அதேவேளை டில்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் இந்தியாவே பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும் இவ்விடயத்தில் இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்தாலும், பிரயோகிக்காவிட்டாலும் மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாகவும், அதனை விரைந்து நிறைவேற்றவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை இந்தியாவும் கூட இலங்கைத் தரப்புடன் பாரம்பரியமாக கிளப்பி வந்த (நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டு வரும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது, தேசிய இனப்பிரச்சினை அல்லது தமிழ்பேசும் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கம் செய்வது போன்ற) பிரச்சினைகளை சில்வாவுடனான சந்திப்புகளில் (ஜெய்சங்கருடனான சந்திப்பு உட்பட) கிளப்பவில்லை. அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்தே கவனம் செலுக்கப் பட்டது என்று சில்வா குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

# தோழர் நல்லகண்ணு 101வது வயதில் இயற்கை எய்தினார்!



தமிழக அரசியல் மண்ணில் விதைக்கப்பட்ட நேர்மையும் நெஞ்சழுத்தமுமான ஒரு பெயர் என்றால் அது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஐயா நல்லகண்ணு அவர்கள்.

அதிகாரத்தின் ஒளி வட்டத்தை நாடாதவர்! பதவியின் பிம்பத்தைப் பற்றிக் கொள்ளாதவர்! மண்ணின் மணத்தையும் மக்களின் வலியையும் தான் தனது அரசியலின் மையமாகக் கொண்டவர்! அரசியல் என்பது சுயநலப் பயணம் அல்ல அது ஒடுக்கப் பட்டவர்களின் உரிமைக்கான உழைப்பு என்ற நம்பிக்கையோடு வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட அரிதான போராளிகளில் முன்னணியில் நிற்பவர் நல்ல கண்ணு.

அவருடைய வாழ்க்கை ஒரு தனி மனிதனின் வரலாறு அல்ல. அது தமிழகம் கண்ட சமூகப் போராட்டங்களின் உயிருள்ள பதிவாகும். இளம் பருவத்திலேயே சமத்துவச் சிந்தனைகளால் ஈர்க்கப் பட்ட அவர், மார்க்சியக் கொள்கைகளின் வழியில் தன்னை வடிவமைத்துக் கொண்டார். விவசாயிகளின் நில உரிமை, கூலித்தொழிலாளர்களின் வாழ்க்கை பாதுகாப்பு, சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான குரல், மொழி மற்றும் மனித உரிமைகள் இவற்றின் எல்லையிலும் அவர் காலடிச்சுவடு பதித்திருக்கிறது. சிறை, துன்பம், தடை, அரசியல் ஒதுக்கல் எதுவும் அவரை மிரட்டவில்லை. கொள்கை மீது கொண்ட பற்றும், பொதுமக்கள் மீது கொண்ட பாசமும் அவரை உறுதியாக நிறுத்தின. அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், அவரது நேர்மை குறித்து எதிரிகளுக்குக் கூட சந்தேகம் எழாதது அவரது வாழ்வின் பெருமை.

ஐயா நல்லகண்ணுவின் வாழ்க்கை எமக்கு கற்றுக் கொடுப்பது ஒன்று தான் அரசியல் என்பது ஆட்சியை அடைவதற்கான கருவி அல்ல. அது மனித சமத்துவத்தை நிலை நிறுத்தும் நெடுந்தூரப் பயணம். புகழ் அவரைத் தேடி வந்தது. ஆனால் அவர் புகழைத் தேடிச் செல்லவில்லை. தலைமுறைகள் மாறினாலும் பண்பும் பணிவும் கொண்ட போராளி என்ற அடையாளம் அவரோடு நிலைத்து நிற்கும். தன்னலம் பாராத தொண்டு, ஒழுக்கம் குன்றாத அரசியல், மனிதநேயத்தை மையமாகக் கொண்ட கொள்கை இவை மூன்றும் ஒன்றாக கலந்த வாழ்வின் சின்னமாக ஐயா நல்லகண்ணு அவர்களின் பெயர் தமிழக அரசியல் வரலாற்றில் என்றும் பொறிக்கப்பட்டிருக்கும்.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் 1925ம் ஆண்டு பிறந்தவர் நல்லகண்ணு. விடுதலைப் போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமை எதிர்ப்பு, கனிமவள கொள்ளைக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவர்.

தனது வாழ்நாளின் பெரும்பகுதியைப் போராட்டங்கள் மற்றும் சிறையில் கழித்தவர் என்பதுடன் மடங்களின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்களின் விவரத்தை தொகுத்து நூலாக வெளியிட்டவர் நல்ல கண்ணு என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் விருப்பத்தின்படி மருத்துவ மாணவர்களின் படிப்புக்காக சென்னை மருத்துவ கல்லூரிக்கு அவரின் உடல் தானம் அளிக்கப்படுவதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# சலே கைது! அச்சத்தில் ராஜபக்ஷாக்கள்?

தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே என்பவர், வெறும் ஒரு புலனாய்வு அதிகாரி மட்டுமல்லஅவர் ராஜபக்ச குடும்பத்தின், குறிப்பாகக் கோட்டாபய ராஜபக்சவின் மிக நெருக்கமான மற்றும் நம்பிக்கைக்குரிய நிழல் அதிகாரியாகவே பார்க்கப்பட்டார்.

தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளமை, ராஜபக்சக்கள் மீதான ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைத் தாண்டி உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் பின்னணியில் இருந்ததாகத் தெரிவிக்கப்படும் அரசியல் சதித்திட்டங்களை நோக்கி நகர்ந்துள்ளது. இது ராஜபக்சக்களுக்குப் பாரிய அரசியல் மற்றும் சட்ட ரீதியான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் (சிவனேசதுரை சந்திரகாந்தன்) மற்றும் அவரது குழுவினருக்கும், சுரேஷ் சாலே தலைமையிலான புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையில் இருந்த மர்மமான தொடர்புகள் நீண்டகாலமாகவே சர்ச்சைக்குரியவை.

இது குறித்துப் பிள்ளையானின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் அசாத் மௌலானா, சர்வதேச ஊடகமான சனல்-4 (Channel 4) இல் வழங்கிய சாட்சியத்தின் படி, தற்கொலைக் குண்டுதாரிகளுக்கும் புலனாய்வுப்



பிரிவினருக்கும் இடையிலான சந்திப்புகளை ஒருங்கிணைத்ததில் பிள்ளையான் தரப்புக்கும் சாலேக்கும் முக்கிய பங்கு இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. இந்தப் பின்னணியில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி யார் என்ற கேள்விக்கு விடை தேடும் பயணத்தில், சுரேஷ் சாலே ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப்பட்டார்.

இது மட்டுமன்றி, தர்கா நகரில் நடந்த தாக்குதல்கள் மற்றும் வவுணதீவில் காவல்துறையினரைக் கொலை செய்தமை போன்ற விடயங்களிலும் சுரேஷ் சாலேவின் தலையீடு இருந்ததாகத் தகவல்கள் வெளியாகின. ராஜபக்சர்களை ஆட்சிபீடம் ஏற்ற வேண்டிய ஒரு கட்டாய சூழலில் அவர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. (மேலதிக விபரம் 24ம் பக்கத்தில்)

# விசாரணைகளைக் குழப்ப வேண்டாம்

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்க முயற்சிக்க வேண்டாம் என அருட்தந்தை சிறில் காமினி கோரிக்கை விடுத்துள்ளார். 26 பெப் 2026 இடம்பெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது 300 மனித உயிர்களைப் பலிகொண்ட ஒரு காட்டுமிராண்டித்தனமான தாக்குதலாகும். இவர்களில் பெரும்பான்மையானோர் உயிர்த்த ஞாயிறுத் திருப்பலியில் கலந்துகொள்ளச் சென்றவர்கள். உயிரிழந்தவர்களில் அனைத்து மதங்களையும், அனைத்து இனங்களையும் சேர்ந்தவர்களும் உள்ளனர். இது ஒரு படுகொலையாகும். இதன் பின்னணியில் உள்ள உண்மையைக் கண்டறிவது என்பது, இந்நாட்டில் சட்டம் சரியாக நடை முறைப்படுத்தப்படுகிறது என்பதை எவரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். அவ்வாறு இல்லா விட்டால், சிலர் சட்டத்திற்குப் பயப்படுவதில்லை என்பதே அதன் பொருளாகும். ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு மறைந்திருக்க முடியும் என்பது உறுதியாகிறது. எனவே, குற்றங்கள் செய்வதற்குப் பயமின்மை என்பது இதன் மூலம் நிரூபிக்கப்படுகிறது. இதனை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவோரையும், கைது செய்யப்படுவதற்குப் பல்வேறு வியாக்கியானங்களை அளிப்போரையும் பார்க்கும் போது புரிகிறது, அவர்களின் பின்னணியில் உள்ள நிகழ்ச்சி நிரல் என்னவென்று. எனவே இதனை அரசியலாக்க வேண்டிய அவசியமில்லை. இது குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் ஒரு சுயாதீனமான விசாரணையாகும். அந்த விசாரணைகளைச் சுயாதீனமாக முன்னெடுக்க இடமளிப்பதே சிறந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்தவரின் ஜனநாயகம் தொடர்பில் பேசும் தகுதி?

இலங்கை தமிழரசு கட்சியின் தீர்மானங்களை பொதுவெளிகளில் விமர்சித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதன் செயலாளர் தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஒரு புறம் அரசாங்கம் புதிய பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறுவதாக தமிழ் சூழலில் அப்புக்காத்து உரையாடல்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் போது மறுபுறும் தமிழரசு கட்சியின் தீர்மானங்களை பொதுவெளிகளில் விமர்சிக்கக் கூடாது - அவ்வாறு விமர்சித்தால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிப்பதை எவ்வாறு புரிந்து கொள்வது?

ஒரு கட்சியின் தீர்மானங்களை அக்கட்சியைச் சேர்ந்தவர்களே பொது வெளிகளில் விமர்சிக்கும் போது, அது கட்சியின் செல்வாக்கை பாதிக்கும் என்று கட்சியின் தலைமை கவலைப்படுவது சரியென்றால், அரசாங்கம் அரசை நிலைகுலையச் செய்யும் விடயங்கள் மீது கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும், இல்லா விட்டால் நாட்டின் அமைதி நிலை சீர்குலைந்து விடும் என்று வாதிடுவதில் என்ன தவறை நாம் காண முடியும்?

இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து கட்சியின் தலைமையுடன், முடிவுகளுடன் முரண்படும் போக்கும் இருந்தே வந்திருக்கின்றது. இதன் விளைவாக சிலர் கட்சியிலிருந்து வெளியேறி தனி வழியிலும் சென்றிருக்கின்றனர்.

எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அரசியல் நிலைப்பாட்டுடன் முரண்பட்டு வி.நவரட்ணம் வெளியேறி, சுயாட்சி கழகத்தை உருவாக்கினார். பின்னர் தமிழரசு கட்சியின் கிழக்கு மாகாணத்தின் தூணாக இருந்தது செல்லையா ராஜதுரையை புறக்கணித்தமையின் காரணமாக, அவர் கட்சியிலிருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். அதன் மூலம் அமைச்சரான அவர் மட்டக்களப்பிற்கு பல நல்ல பங்களிப்புக்களை வழங்கியிருந்தார்.

ஒருவர் கட்சியிலிருந்து வெளியேறினால் அவரை உடனடியாக துரோகி என்று தூற்றும் அநாகரிகமான அரசியல் கலாசாரமொன்றும் தமிழில் இருக்கின்றது. பணம் பதவியை மட்டும் கொண்டு கட்சி மாறுவது தவறானது ஆனால் அரசியல் முரண்பாடுகளால் வெளியேறுவது என்பது அவர்களின் உரிமை.

ஆனால் வி.நவரட்ணத்தை துரோகியென்று அன்றைய தமிழரசு கட்சியின் தலைவர்கள் கூறியதாக தெரியவில்லை. வி.நவரட்ணம் பிற்காலத்தில் தமிழீழ சிந்தனைப் பள்ளியின் பிதாமகர் என்றும் சிலரால் கொண்டாடப்பட்டார்.

2004 தேர்தலில் தமிழரசு கட்சி மீண்டும் அரசியல் அரங்கிற்கு கொண்டு வரப்பட்ட போது, அதற்குள் கட்சிச் சண்டை என்று ஒன்று இருந்திருக்கவில்லை சண்டை பிடிக்கவும் முடியாது ஏனெனில் கட்சியின் தீர்மானம் எடுக்கும் உரிமை வன்னியிடம் இருந்தது - எதனை பேச வேண்டும் - எப்போது பேச வேண்டும் என்னும் அனைத்தையும் தமிழ்ச்செல்வனே தீர்மானித்திருந்தார்.

புலிகளின் அழிவின் பின்னர், தமிழரசு கட்சியின் தலைமை சம்பந்தனிடம் வந்த உடனேயே முரண்பாடும் ஆரம்பித்து விட்டது. இதற்கு புலம்பெயர் குழுக்களும் ஒரு பிரதான காரணம். இதன் பின்னர் தமிழரசு கட்சியின் தலைமையிலான கூட்டமைப்பு தொடர்ந்தும் முரண்பாட்டின் களமாகவே இருந்தது.

பாராளுமன்ற உறுப்புரிமையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்னும் தனிநபர் இச்சையின் விளைவாகவும், அன்றைய சூழலில் சம்பந்தனை எதிர்த்துச் செல்வது அரசியல் ரீதியில் சிக்கலானது என்பதாலும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் புளொட் ஆகியவை பல்லைக் கடித்துக் கொண்டு பதவியை தக்க வைத்துக் கொண்டன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கட்சிக்குள் மோதுவதும் பின்னர் பொது வெளிகளில் அவற்றை விளம்பரம் செய்வதும் தமிழர் அரசியலுக்கு புதிது அல்ல.

# வடக்கு கிழக்கைப் பிரித்த ஜே.வி.பி. மாகாணத்திற்கு அதிகாரத்தை கையளிக்க மாட்டார்களென அடித்துக் கூறுகிறார் கலாநிதி விக்னேஸ்வரன்

இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு முன் நின்ற ஜேவிபி என்கின்ற தற்போதைய தேசிய மக்கள் சக்தியினர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களை கையளிப்பதற்கு விரும்ப மாட்டார்கள் என முன்னாள், இணைந்த வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் கலாநிதி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆளுநரின் கீழ் உள்ள வடக்கு மாகாணசபைக்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நிழல் அமைச்சர்களாக நியமித்தமை தொடர்பில் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரித்த ஜேவிபியினர் தற்போது தேசிய மக்கள் சக்தியாக ஆட்சி அதிகாரத்தில் உள்ளார்கள்.

அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒரு புறம் இருக்க வடக்கு கிழக்கு மாகாண சபையை அதிகாரம் உள்ள ஒரு சபையாக செயல்படுவதற்கு அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்பது தெரிந்த விடயம்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தபின் மாகாண சபை முறைமை தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் வழி விவகார அமைச்சராக இருக்கின்ற விஜித ஹேரத் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி இருந்தேன் இன்று வரை பதில் கிடைக்கவில்லை. ஒரு மாகாண சபை வினைத்திறனாக செயல்பட வேண்டுமானால் 160 நியதி சட்டங்களை உருவாக்க வேண்டும்



இலங்கையில் அவ்வாறு எந்த மாகாணமும் உருவாக்கவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் 25க்கு குறைவான நியதிச் சட்டங்களையே உருவாக்க முடிந்தமை துரதிஷ்டவசமான சம்பவமாக இருந்தாலும் அதற்கு அந்தந்த மாகாணங்களில் இருந்த ஆளுநர்கள் காரணமாக இருந்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் ரணில் விக்ரமசிங்க காலத்தில் மாகாண சபை முறை தொடர்பில் ஆலோசனை வழங்கும் குழுவில் நான் அங்கம் வகித்தேன்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சிவி விக்னேஸ்வரனுடன் கொழும்பில் சந்தித்த போது மாகாணங்களில் இருந்து மீள மத்திக்கு பெறப்பட்ட அதிகாரங்களை திரும்ப வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தோம்.

அவர் நிபுணர் குழு ஒன்றை நியமிப்பதற்கு பெயர்களைப் பரிந்துரைக்குமாறு கேட்டிருந்தார் ஆனால் அவருடைய காலத்தில் அதனை நிறைவேற்ற முடியாமல் போனது.

தற்போது தேசிய மக்கள் சக்தியினர் மாகாண அதிகாரங்கள் தொடர்பில் பேசுவதற்கு கூட விருப்பமில்லாதவர்களாக இருப்பது மாகாண சபை தேர்தல் ஒன்றை நடத்துவார்களா என்ற சந்தேகம் வலுவாக உள்ளது.

மாகாண சபை தேர்தலை நடாத்த விருப்பம் இல்லாத காரணத்தினால் வடக்கு மாகாணத்துக்கு தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை நிழல் அமைச்சர்களாக உத்தியோகபற்றற்ற முறையில் செயற்படுத்தப் பார்க்கிறார்கள்.

அவர்களுக்கு நன்கு தெரியும் நிழல் அமைச்சர்களை சட்ட ரீதியாக நியமனம் செய்ய முடியாது அத்தோடு ஒரு மாகாணத்திற்கு ஒரு வகையிலும் இன்னொரு மாகாணத்துக்கு வேறு வகையிலும் செயல்படுத்த முடியாது என்பது நன்கு தெரியும்.

ஆகவே ஆட்சி அதிகாரத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியினர் மாகாண அதிகாரங்களை வழங்காது தமது கட்டுப்பாட்டில் மாகாண நிர்வாகங்களை நடத்துவதற்கு எத்தணிப்பது அரசியலமைப்பை மீறும் செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாகாண சபைகள் தேர்தல்கள் எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்கும், அது தொடர்பான விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கும் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித்த ஹேரத் தலைமையில் 12 உறுப்பினர்களை உள்ளடக்கிய விசேட செயற்குழு ஒன்றை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நியமித்துள்ளார்.

சபாநாயகர் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் விசேட செயற்குழுவை நியமித்துள்ளார். இந்த குழு மூன்று மாத காலத்துக்குள் விதப்புரை அறிக்கையை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





# மாகாணசபைகளுக்கான தேர்தல் இந்தியாவும் கைவிட்ட அநாதை!

**கட்டுரையாளர்:- பனங்காட்டான்**

இலங்கைத் தமிழர் அரசியலில் இப்போது முனைப்புப் பெற்றிருப்பவை இரண்டு விடயங்கள். ஒன்று, தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் –சிறீதரன் விவகாரம். அடுத்தது, காணாமலாக்கப்படும் மாகாண சபைகள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்று, தமிழரசுக் கட்சி தலைவர் தேர்தலிலும் தோல்வியுற்ற சுமந்திரன் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி.யாக தெரிவான சிறீதரனை கட்சியிலிருந்து ஓரங்கட்டி தாமே கட்சியின் எல்லாமாகி அதனை அழித்து ஒழிக்க நினைக்கிறார் என்று பெரும்பாலான அரசியல் ஆய்வாளர்களும் விமர்சகர்களும் தொடர்ந்து சுட்டி வருகின்றனர்.

தமிழரசுக் கட்சிக்குள் குட்டி ஜமீந்தாராக காட்சியளிக்கும் சிறீதரனும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. போனால் மயிர் – வந்தால் மலை என்ற பாணியில் காய்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தம்மீது மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளை எதேச்சாதிகாரமெனபார்க்கும் சிறீதரன் நீதிமன்றத்தை நாடியிருப்பதாக தகவல்கள் வெளி வருகின்றன.

இதன் ஓர் அம்சமாக தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அறிக்கையிடுவதற்காக நிறுவப்பட்டுள்ள சில உபகுழுக்களின் விபரங்களைக் கேட்டு சிறீதரன் கட்சியின் பதில் தலைவரானசி.வி.கே. சிவஞானத்துக்கு இந்தமாதம் 12ம் திகதி ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

இதற்கு அவர் சிறீதரனுக்குஅனுப்பிய பதிலில் தனிப்பட்ட குடும்பநிகழ்வுக்காக தாம் வெளிநாடு செல்வதால் தம்மிடம் கோரிய விபரங்களை கட்சியின் பொதுச்செயலாளருக்கு எழுதி பெற்றுக் கொள்ளுமாறு எழுதியிருந்தார்

உடனடியாக இதற்குப் பதிலளித்த சிறீதரன், நீங்களே பொருத்தமானவருக்கு அனுப்பி அவற்றைப் பெற்றுத் தாருங்களென கேட்டிருந்தார். இதற்குப் பின்னர் என்ன நடைபெற்றது என்பது இது வரை தெரியவரவில்லை.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு முழுத்தமிழரும் அறிந்தது. சுமந்திரனுக்கு நேரடியாக சிறீதரன் கடிதம் அனுப்பியிருந்தால் உரிய முறையில் அது கவனத்துக்கு எடுக்கப்பட்டிராது என்பதும் சி.வி. கே.சிவஞானத்துக்குத் தெரியும்.

அப்படியிருந்தும் இவ்விடயத்தில் பொறுப்பாக நடந்திருக்க வேண்டியவர் அதனை மறந்து சிறீதரனை சுமந்திரனுக்கே நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தியதை தவிர்த்திருக்கலாம். அது மட்டுமன்றி, சிறீதரன் தமக்கு எழுதிய கடிதத்தை சுமந்திரனுக்கு அனுப்பி கேட்கப்பட்ட தகவல்களை வழங்குமாறு அறிவுறுத்தியிருக்கலாம்.

இவ்விடயத்தில் கட்சியின் தற்போதைய அலங்கோலத்தைப் புரிந்து கொண்டும் உட்கட்சி மோதல்களைத் தெரிந்து கொண்டும் சிறீதரனின் கோரிக்கைகளை நிறைவேற்றாது பாராமுகமாக இருந்ததை தவிர்த்திருக்க வேண்டியது தமது கடமை என்பதையும் ஏனோ அவர் மறந்து விட்டார் போலவே தெரிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் கட்சிக்குள் முரண்களையும் மோதல்களையும் வளர்க்குமே தவிர குறைக்காது. ஏற்கனவே சிறீதரன் மீது நடத்தி வரும் பாய்ச்சலின் இன்னொரு கட்டமாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் மீதும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கட்சியின் உள்விவகாரங்களை விமர்சிப்பதாகக் கூறி எச்சரிக்கைக் கடிதமொன்றை சுமந்திரன் அவருக்கு அனுப்பியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்ட முடிவை விமர்சிக்கும் அமைச்சர் மீது நடவடிக்கை எடுப்பது போல இந்த எச்சரிக்கை அமைந்துள்ளது. தமது சகாவான சாணக்கியனுடன் ஒத்துப் போகாத சிறீநேசனையும் கட்சியிலிருந்து ஓரங்கட்ட சுமந்திரன் தமது காய்களை நகர்த்துவதாகவே கிழக்கிலங்கை கட்சிப் பிரமுகர்கள் கருதுகின்றனர்.

தமிழரசுக் கட்சியை சாம்பராக்கியே விடுவதென ஒருவர் சன்னதம் கொண்டு ஆடுகிறார் என்றால், கட்சியை உருவாக்கி தியாகத்தால் கட்சியை வளர்த்தெடுத்த தந்தை செல்வா மீண்டும் உயிர் பெற்று வந்தாலும் அதனை தடுக்க முடியாது போலிருக்கிறது.

மாகாணசபைத் தேர்தல் விவகாரமும் தமிழரசுக் கட்சியின் நிலையைப் போன்றது தான். 1987ல் இலங்கை–இந்திய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் ராஜிவ் காந்தியும் இன்று உயிருடன் இல்லை. இவர்கள் தலைவராக இருந்த ஐக்கிய தேசியகட்சியும், இந்தியகாங்கிரஸ் கட்சியும் எழும்ப முடியாதளவுக்கு தள்ளப்பட்டு உள்ளன.

இரு நாடுகளும் செய்திருந்த ஒப்பந்தத்தை வன்மையாக எதிர்த்து 1987–1989 காலத்தில் ரத்தக்களரியை ஏற்படுத்திய ஜே.வி.பி.யின் புதுவடிவமான தேசிய மக்கள் சக்தி இப்போது இலங்கையை ஆட்சிபுரிகிறது.

இந்தியகாங்கிரசை ஓரந்தள்ளி விட்டு மோடியின் ஆட்சி இந்தியாவில் தொடருகிறது. இவ்வாறான நிலையில் இருதரப்பிலும் யாருக்குத் தான் மாகாணசபையில் அக்கறை இருக்கும்?

சில வாரங்களுக்கு முன்னர் இந்தியா சென்று திரும்பிய ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஒரு விடயத்தை பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

அங்கு தம்மை சந்தித்த ஆட்சித் தரப்பைச் சேர்ந்த எவரும் மாகாண சபைகள் பற்றியோ அதற்கான தேர்தல்கள் பற்றியோ எதுவுமே பேசவில்லை என்பதே இவரது அறிவிப்பு.

ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு முன்னர் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியகட்சிகளின் பிரதிநிதிகளிடம் இந்தியவெளிவிவகார அமைச்சர் என்ன சொன்னார்? இருநாட்டு ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகி 35 வருடங்களுக்கு மேலாகி விட்டது. இடைப்பட்ட காலத்தில் அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. இல்லாதவைகளை கேட்பதை விட இருப்பவைகளை முழுமையாகப் பயன்படுத்துங்கள் என்று அவர் வழங்கிய ஆலோசனையின் அர்த்தத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். (மாகாணசபையை இனி எதிர் பார்க்க வேண்டாம் என்பதையே ஜெய்சங்கர் இராஜரீக வார்த்தைகளால் எடுத்துக் கூறியிருந்தார்).

35 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்று அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டதில் சட்டரீதியாக மேற் கொள்ளப்பட்டவைகள் முக்கியமானவை. மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த போது வடக்குகிழக்கு இணைப்புக்கு எதிராக ஜே.வி.பி.யினர் தாக்கல் செய்த வழக்கில் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பை அப்போதைய பிரதம நீதியரசராகவிருந்தசரத் என்.சில்வா வழங்கியிருந்தார்.

இதனை உள்நாட்டின் நீதிவிவகாரம் என்று கருதி இந்தியா மௌனம் சாதித்தது. மாகாணசபைகளுக்கு காணி அதிகாரமும் காவற்துறை அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாக ஒப்பந்தத்தில் கூறப்பட்ட போதிலும் இறுதி வரை அது வழங்கப்படவில்லை. இதனையிட்டு இந்திய ஆட்சி பீடம் ஒரு போதும் ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. கடந்தகால் நூற்றாண்டில் இந்திய தரப்பிலிருந்து எந்தவொரு அழுத்தமும் மாகாண சபை அதிகாரங்களுக்கு கொடுக்கப்படவும் இல்லை. அவ்வப் போது பட்டும் படாதது போல மாகாணசபைக்கு ஆதரவு போன்ற கருத்துகளை இந்தியத் தரப்பு கூறிக் கொண்டிருந்தது மட்டுமே காணப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண சபைகளை ஒன்றாக இணைப்பது சம்பந்தமாக அதனை முன்மொழிந்த அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன எந்த உள் நோக்கில் அவ்வாறு செய்தாரென்பதை அவரே ஓரிடத்தில் தெரிவித்துள்ளார். மென் அன்ட் மற்றர்ஸ் (Men and Matters) என்நூலில் பின்வருமாறு அதனை விளக்குகிறார்: மாகாண சபை நிர்வாகத்துக்கு வடக்கையும் கிழக்கையும் தற்காலிகமாக இணைப்பதற்கு நான் ஆலோசனை வழங்கினேன். கிழக்கு மாகாணத்தில் இது தொடர்பாக கருத்துக் கணிப்பு நடத்தி அதன் ஆதரவு கிடைத்தால் மட்டுமே வடக்குடன் நிரந்தரமாக இணைக்க முடியுமென கூறியிருந்தேன்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் சேர்ந்து அறுபதுவீதமானவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் வடக்குடன் இணைவதற்கு சம்மதம் வழங்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே தற்காலிக இணைப்பை ஏற்றுக் கொண்டேன் என்ற ஜே.ஆரின் கூற்று அவரின் நரிக்குணத்தை அப்பட்டமாக அம்பலப்படுத்துகிறது.

இப்போது வடக்குகிழக்கு இணைப்பு சட்டரீதியாக இல்லாமலாக்கப்பட்டு விட்டது. காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் கிடையாது. இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி அநுரகுமரவுடன் தமிழரசுக் கட்சியினர் நடத்திய சந்திப்பிலும் மாகாண சபைத் தேர்தல் பேசப்பட்டது.

இனப்பிரச்சனை தீர்வுக்கு கடந்த எழுபத்தைந்து வருடங்களாக தமிழர் தரப்பு சகல சிங்கள ஆட்சித் தரப்புடனும் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிவடைந்தன என்று தமிழரசுக் கட்சியினர் எடுத்துக் கூறியதை அமைதியாக செவி மடுத்த ஜனாதிபதி அநுரகுமர, எழுபத்தைந்து வருடங்களாக எந்த அரசாங்கத்தாலும் நிறைவேற்ற முடியாது போனதை தொடர்ந்து பேசுவதால் என்ன பயன் என்று கேட்டு பந்தை தமிழரசுக் கட்சியின் பக்கமே அடித்துவிட்டார்.

புதியஅரசியலமைப்பில் அனைத்தினங்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு கிடைக்குமென்பதை சொன்னதோடு அனைத்துக் கட்சிகளும் இதில் இணைய வேண்டுமெனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். ஆனால் மாகாண சபை தேர்தல் நடைபெறுமென்று எந்த உறுதியும் வழங்கவில்லை.

ரில்வின் சில்வா ஊடாக இந்தியாவின் நிலைப்பாடும் பகிரங்கமாகியுள்ளது. பதின் மூன்றாம் திருத்தம், மாகாண சபைத்தேர்தல் ஆகியவைகளை உள்ளடக்கிய இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் மாப்பிள்ளையான இந்தியாவும் மாகாணசபையை கை விட்டு விட்டது. இப்போது மாகாணசபை என்பது பெற்றார் இல்லாத ஓர் அநாதை. இதையார் தத்தெடுக்கப் போகிறார்கள்?

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


21 பெப்ரவரி 2026 முதல் 28 பெப்ரவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 26 பெப்ரவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டுத் திதி



### திரு பொன்னம்பலம் விசுவலிங்கம்

அனலைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னம்பலம் விசுவலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டுத் திதி 26 பெப்ரவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னம்பலம் விசுவலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகரெத்தினம் இராஜதுரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களுடைய ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 24 பெப்ரவரி 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகவும் திரு இராஜதுரை ஐயாத்துரை அவர்களது 14வது ஆண்டு நினைவாகவும் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பிருந்தா இரத்தினவடிவேல்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிருந்தா இரத்தினவடிவேல் அவர்களது மூன்றாம் மாத நினைவு நாள் 23 பெப் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 பெப் 2026 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பிருந்தா இரத்தினவடிவேல் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம்

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 27 பெப்ரவரி 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 38வது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கீதபூஷணம் இசை ஆசிரியர்
### திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 38வது ஆண்டு நினைவு நாள் 09 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



11 பெப்ரவரி 2026 புதன்கிழமை காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு சிவநேசன் துரைச்சாமி அவர்களது 42வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 பெப் 2026 சனிக்கிழமை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 பெப் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகரன் கயல்விழி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பகீரதன் ஸ்ரீகரனின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் பகீரதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



16 பெப் 2026 திங்கட்கிழமை சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



18 பெப் 2026 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Dr இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களுடைய 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



18 பெப் 2026 புதன்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 பெப் 2026 திங்கட்கிழமை கனடாவில் குடும்ப இணைவு நன்நாளுக்காக கனடாவில் வாழும் திரு திருமதி கோணேஸ்வரன் குடும்பத்தினர் அன்றைய நாளுக்காக 19 பெப் 2026 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



22 பெப் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் மிதுலன் நந்தகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மிதுலன் தனது பெற்றோர்கள் சகோதரத்துடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



24 பெப் 2026 ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 பெப் 2026 திங்கட்கிழமை மூளாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பிருந்தா இரத்தினவடிவேல் அவர்களது மூன்றாவது மாத நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 பெப் 2026 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




25 பெப் 2026 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் T.K. பரமேஸ்வரன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் அவர் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 பெப் 2026 வியாழக்கிழமை யாழ்.அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா முத்துலிங்கம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 பெப் 2026 வியாழக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 பெப் 2026 வியாழக்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னம்பலம் விசுவலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டுத் திதியாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



27 பெப் 2026 வெள்ளிக்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு டிரம்ப் விதித்த வரிகளை ரத்துச் செய்து உயர்நீதிமன்றம் கூறியது என்ன?




அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம், அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த ஆண்டு அமல்படுத்திய உலகளாவிய இறக்குமதி வரியை ரத்து செய்துள்ளது. அமெரிக்காவின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் என கூறி, வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குக் கடந்த ஆண்டு டிரம்ப் வரி விதித்தார்.

நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்குப் பதிலாக, 1977ஆம் ஆண்டின் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தைப் பயன்படுத்தி டிரம்ப் நிர்வாகம் இந்த வரிகளை விதித்தது.

ஆகஸ்ட் 2025 இல் ஓர் அமெரிக்க நீதிமன்றம் டிரம்பின் பெரும்பாலான வரிகள் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பளித்தது. ஆனால் அவை அமலில் இருக்க அனுமதிக்கப்பட்டன.

அந்த மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்ய வெள்ளை மாளிகை கோரிக்கை வைத்ததால் விவகாரம் இறுதியில் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் தான் விதித்த வரிகளை ரத்து செய்த உச்சநீதிமன்ற தீர்ப்பு 'மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாக' தெரிவித்துள்ளார்.

அமெரிக்க உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் டிரம்ப் தனது அதிகாரங்களை மீறி தேசிய அவசரநிலைக்காக உருவாக்கப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தியதாகக் கூறியது. சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டம் வரிகளை விதிக்க அனுமதிக்கவில்லை என நீதிபதிகள் கூறினர்.

உச்சநீதிமன்ற நீதிபதிகளில் 6 பேர் வரி ரத்துக்கு ஆதரவாகவும் 3 பேர் இந்த தீர்ப்புக்கு எதிராகவும் இருந்தனர். ஆனால் பெரும்பான்மை நீதிபதிகளின் ஆதரவு இருந்ததால் வரி ரத்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

வரி விதிக்கும் தனது திறனைக் கட்டுப்படுத்தும் உச்ச நீதிமன்றத்தின் முடிவு ஒரு 'பொருளாதார மற்றும் தேசிய பாதுகாப்புப் பேரழிவு' மற்றும் 'மோசமான' விளைவுகளை ஏற்படுத்தும் என்று டொனால்ட் டிரம்ப் பல மாதங்களாக எச்சரித்து வந்தார்.

உச்ச நீதிமன்றத்தின் அமர்வு அமெரிக்க அதிபருக்கு எதிராகத் தீர்ப்பளித்த போது அவர் முன் வைத்த கவலைகளைப் பற்றிப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

அதிபருக்கு அல்ல அமெரிக்க நாடாளுமன்றத்திற்கே வரிகளை விதிக்கும் அதிகாரம் உள்ளது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், அதிபர் தனது சட்டப்பூர்வ தற்காப்பில் குறிப்பிட்ட 1977ஆம் ஆண்டின் அவசரக்கால பொருளாதார அதிகாரச் சட்டத்தில் (Emergency Economic Powers Act of 1977) டிரம்பிற்கு இத்தகைய விரிவான அதிகாரங்களை வழங்கும் அம்சம் ஏதுமில்லை என்றும் அவர்கள் கூறினர்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, இந்த அதிபரின் விரிவான நிர்வாக அதிகாரப் பயன்பாட்டிற்கு விதிக்கப்பட்ட ஓர் அரிய தடையாகும். விரைவுபடுத்தப்பட்ட அடிப்படையில் பரிசீலிக்கப்பட்ட இந்த வழக்கு அதிபர் அதிகாரத்தின் இத்தகைய விரிவான பயன்பாட்டின் ஒரு பாதையை அடைக்கிறது.

பிறப்புரிமை குடியுரிமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மற்றும் முறைகேடுகள் நடந்ததாகக் கூறப்படும் புகாரின் அடிப்படையில் ஃபெடரல் ரிசர்வ் கவர்னரை பதவி நீக்கம் செய்ய முயன்றது போன்ற சர்ச்சைக்குரிய நிர்வாக அதிகாரப் பயன்பாடு தொடர்பான பல முக்கிய வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் வரும் மாதங்களில் டிரம்பிற்கு இது மட்டுமே பின்னடைவாக இருக்காது.

கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் டிரம்ப் உலகின் கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலிருந்து வரும் பொருட்களுக்கும் வரிகளை அறிவித்தார். இதில் 10% முதல் 50% வரை வரிகள் விதிக்கப்பட்டன. இந்த வரிகள் மூலம் அரசுக்கு வரும் வரி வசூல் அதிகரிக்கும், அமெரிக்கர்கள் அதிகமாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்குவார்கள் அமெரிக்காவில் முதலீடு அதிகரிக்கும் என டிரம்ப் கூறினார்.

ஆனால் விமர்சகர்கள் இதனால் பொருட்களின் விலை உயரக்கூடும் என்றும் உலக பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் கூறினர். பிற நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருக்கும் வர்த்தக பற்றாக்குறையை குறைக்கதான் விரும்புதாக டிரம்ப் கூறினார்.

சில சந்தர்ப்பங்களில், டிரம்ப் வரிகளை பிற நாடுகள் மீது அழுத்தம் கொடுக்கவும் பயன்படுத்தினார். உதாரணமாக சீனா, மெக்ஸிகோ, கனடா ஆகிய நாடுகளுக்கு எதிராக வரிகளை அறிவிக்கும் போது அந்த நாடுகள் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் 'பென்டனில்' போதைப் பொருளை அமெரிக்காவுக்கு வருவதைத் தடுக்க அதிக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

முதலில் இந்தியாவுக்கு 25ூ வரிகளை டிரம்ப் விதித்தார். பின்னர் ரஷ்ய கச்சா எண்ணெயை இந்தியா வாங்குவதாக கூறி வரிகளை 50% ஆக உயர்த்தினார். இந்த நிலையில் சமீபத்தில் இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தியா மீதான வரிகள் 18% ஆகக் குறைக்கப்பட்டது. டிரம்பால் அறிவிக்கப்பட்ட பல வரிகள் பின்னர் திருத்தப்பட்டன அல்லது தாமதப்படுத்தப்பட்டன. - பிபிசி 20 பெப் 2026

## அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதிகளை வளர்ப்பு நாய்களெனத் திட்டிய ட்ரம்ப்

கனடா உள்ளிட்ட நாடுகள் மீது ட்ரம்ப் அரசு விதித்த கூடுதல் இறக்குமதி வரிகள் செல்லாது என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்பு வெளியான சில மணி நேரங்களிலேயே வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப், நீதிபதிகளைக் கடுமையாக விமர்சித்தார். இது தொடர்பில் ட்ரம்ப் பேசியதாவது, நாட்டிற்கு நன்மையான முடிவை எடுக்க துணிச்சல் இல்லாத இந்த நீதிபதிகள் ஒரு அவமானம். அவர்கள் தங்களின் குடும்பத்திற்கே தலை குனிவை ஏற்படுத்தி விட்டனர்.

தீர்ப்பளித்த நீதிபதிகள் பெயரளவில் தான் குடியரசுவாதிகள், ஆனால் தீவிர இடதுசாரி ஜனநாயகக் கட்சியினரின் வளர்ப்பு நாய்களாக மாறி விட்டனர். அவர்களுக்கு தேசப்பற்றோ, அரசியலமைப்பின் மீது விசுவாசமோ இல்லை.

நான் கோடிக்கணக்கான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றேன். ஆனால் இந்த நீதிபதிகள் முட்டாள்கள். அவர்கள் அந்நிய சக்திகளின் விருப்பங்களுக்கு கட்டுப்படுகிறார்கள்.


அதேநேரம் ஒன்பது பேர் கொண்ட அமர்வில் எனது கொள்கைக்கு ஆதரவாக நின்ற நீதிபதிகள் தாமஸ், அலிட்டோ மற்றும் கவனோ ஆகியோரை வலிமையும் துணிச்சலும் மிக்கவர்கள்' என்று தெரிவித்தார். தீர்ப்பளித்த நீதிபதிகள் பலர் முன்னர் ட்ரம்ப் நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டிருந்ததும் அவர்கள் தற்போது ட்ரம்ப்புக்கு எதிராக தீர்பளித்துள்ளதே ட்ரம்ப் கோபத்தை மேலும் தூண்டியுள்ளது.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்திருந்த பரவலான இறக்குமதி வரிகள் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த 24 மணித்தியாலத்திற்குள், அவர் புதிய வரி உயர்வை அறிவித்துள்ளார்.

உலகளாவிய இறக்குமதி வரியை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்துவதாக 21 பெப் சனிக்கிழமை தனது ட்ரூத் சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.


உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்த 'அவசரகால அதிகாரங்களுக்கு' பதிலாக, 1974 வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 122-ன் கீழ் இந்த வரிகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ளார்.

இந்த அதிகாரத்தின் கீழ் விதிக்கப்படும் வரிகள் அதிகபட்சமாக 150 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதற்கு மேல் நீடிக்க பாராளுமன்றத்தின் அனுமதி அவசியம் என தெரிவிக்கப்படுகிறது.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஜே.வி.பியை மாற்ற முனைகிறதா இந்தியா?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணம் அரசியல் வட்டாரங்களில் அதிகம் பேசப்படும் ஒன்றாக இருந்தது. அரசாங்கப் பதவி வகிக்காத போதும் அவர் இந்திய அரசாங்கத்தினால் அழைக்கப்பட்டிருந்தார்.

ஆட்சியில் இல்லாத காலகட்டங்களில், பல அரசியல் தலைவர்கள், இந்தியா, சீனா போன்ற நாடுகளால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாச போன்றவர்களுக்கு இவ்வாறான வாய்ப்புகள் கிடைத்திருந்தன. ஆனால், இவர்களிடத்தில் இருந்து ரில்வின் சில்வா வேறுபட்டவர்.



ஏனென்றால் அவர் முற்றுமுழுதாக இந்திய எதிர்ப்புவாதத்தை முன்னிறுத்தி, அரசியல் செய்து வந்தவர். ஜே.வி.பி அரசியல் கட்சியாக இருந்த போதும், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும், அதற்குப் பின்னரான அரசியல் செயற்பாடுகளின் போதும், அதன் முதன்மை இந்திய எதிர்ப்பும், சீன சார்பும் அதன் கொள்கை நிலைப்பாடாக இருந்தது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரப்படுத்தப்பட்ட ஆயுத போராட்டம், இந்தியப் படைகளுக்கு எதிரான நடவடிக்கைகள், இந்தியப் பொருட்கள் புறக்கணிப்பு போன்றவற்றில் மாத்திரமன்றி, அதற்குப் பின்னரான காலகட்டங்களிலும், இந்தியாவை எதிர்ப்பதை ஜே.வி.பி. முக்கிய இலக்காக கொண்டிருந்தது.

இந்தியா பிராந்திய சக்தியாக இருப்பது, எப்போதும் இலங்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பது ஜே.வி.பி.யின் கணிப்பு. அதனால் அதன் பிரதான கொள்கையிலேயே, இந்தியா எதிர்ப்பு வாதம் உள்வாங்கப்பட்டது. அவ்வாறு உள்வாங்கப்பட்டதற்கான அடிப்படை காரணம், அதன் சீன சார்பு நிலையும், சீனாவின் ஆதரவை பெற்றுக் கொள்கின்றஉத்தியாகவும் இருந்திருக்கலாம்.

இவ்வாறான பாரம்பரியத்தில் இருந்து வந்த ஒரு கட்சியின் பொதுச் செயலாளர், இன்று ஆட்சியில் பங்கு கொள்ளாவிட்டாலும், அதிகாரத்தை தீர்மானிப்பவராக இருக்கிறார். ரில்வின் சில்வாவே நாட்டின் அதிகாரபூர்வமற்ற ஜனாதிபதியாக செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

அண்மையில் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர், பெலவத்தையே நாட்டை ஆள்கிறது என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்திருந்தார். ஆனாலும் அவர் தான், நாட்டின் நிழல் ஜனாதிபதி என்ற கருத்து வலுவாக இருப்பதை மறுக்க முடியாது. இத்தகைய பின்னணியில், அவரது இந்தியப் பயணம் ஆச்சரியமானது தான்.

ஜே.வி.பி. அண்மைக் காலத்தில் இந்திய ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும், அது எந்தளவுக்கு உண்மையானது, விசுவாசமானது, நேர்மையானது என்ற கேள்விகள் இருக்கின்றன.

நீண்ட பாரம்பரியத்தை விட்டு விலகி, ஜே.வி.பி. இந்திய ஆதரவு நிலைப்பாட்டை எடுக்க முனைகிறது என்றால் அதனை யாரும் இலகுவாக நம்பி விடக் கூடிய நிலை இல்லை.

அதனை சாதகமான ஒரு நிலையாகவும் எடுத்துக் கொள்ள முடியாது. இவ்வாறான பின்னணியில் ரில்வின் சில்வா மற்றும் குழுவினரின் இந்திய பயணம் உன்னிப்பாக நோக்கப்பட வேண்டிய ஒன்று.

முதன் முதலாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட ரில்வின் சில்வாவிடம் உள்ள இந்தியா தொடர்பாக அவரிடம் உள்ள எதிர்மறை நிலையை களையும் வகையில் அவரது பயண நிகழ்ச்சி நிரல் ஏற்பட்டாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் நகர்வுகளுக்கு ஜே.வி.பி. எதிர்ப்பை வெளிப்படுத்திய விடயங்கள் குறித்த தவறான அபிப்பிராயங்களை களைய இந்தியா முயன்றிருக்கிறது.

இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் மாகாண சபைகளை இயங்கச் செய்வது குறித்து இந்திய தரப்பில் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக கூறப்பட்டாலும், அவ்வாறான பேச்சுக்கள் நடக்கவில்லை என ரில்வின் சில்வா கூறியிருக்கிறார்.

இந்தப் பயணத்தின் போது ரில்வின் சில்வாவை, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும், துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பவன் கபூர் ஆகியோரே சந்தித்துள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பு எதுவும் நடக்கவில்லை, இது மோடியின் பணிச்சுமையினால் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அல்லது ரில்வின் சில்வாவுக்கு கூடுதல் முக்கியத்துவத்தை கொடுக்க விரும்பாமல் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ரில்வின் சில்வாவுக்கு முக்கியத்துவம் கொடுத்தே அவர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அப்படியிருக்க, அவருக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பாமல் இருக்கலாம் என்பது சற்று குழப்பமானது தான்.

இந்தியாவின் உயர்மட்ட தலைவர் தன்னைச் சந்திப்பதை வைத்து, ரில்வின் சில்வா மிகையாக எடைபோடுவதற்கும், அரசியல் செய்வதற்கும் இந்தியா இடமளிக்க விரும்பாதிருக்கலாம். புது டெல்லியில் இந்தியாவின் தனித்துவமான டிஜிட்டல் ஆவண மையத்திற்கு ரில்வின் சில்வா பயணம் மேற்கொண்டிருந்தார்.

இலங்கையில் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கும் திட்டம், இந்தியாவின் ஆதார் திட்டத்தை அடியொற்றியது தான். இதனை நிறைவேற்றும் பொறுப்பு இந்தியா நிறுவனத்திடமே பொறுப்பேற்றிருக்கிறது.

டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்கும் பொறுப்பு இந்திய நிறுவனத்திடம் வழங்கப்படுவதை ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்து வந்தது. முன்னர் இதனை பாகிஸ்தானுக்கு கொடுக்க திட்டமிட்டபோது, இந்தியா அதனை தடுத்தது.

இப்போது தவிர்க்க முடியாமல் இந்தியாவிடம் இந்தத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரிடருக்கு பின்னர், பேரிடர் மீட்பு படை ஒன்றை உருவாக்குவதற்கு இந்தியா உதவ முன்வந்திருக்கிறது.

பயிற்சி அளிக்கவும், தேவையான உபகரணங்களை வழங்கவும் தயாராக இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் தனது இலங்கைப் பயணத்தின் போதும் குறிப்பிட்டிருந்தார். அதற்கு இலங்கை அரசாங்கம் இன்னமும் தெளிவான எந்த பதிலையும் கொடுக்கவில்லை.

இந்தியா உதவ முன் வருகின்ற சில விடயங்களை இலங்கை சந்தேகத்துடன் நோக்குகின்றது. இந்த விடயத்தில் இலங்கை தரப்பை குறிப்பாக ஜே.வி.பி.யை திருப்திப்படுத்துவதற்கு இந்தியா முயன்றிருக்கிறது.

இது போல, இலங்கையில் 'மில்கோ' மற்றும் கால்நடை அபிவிருத்திச் சபையின் பண்ணைகளை, இந்தியாவின் 'அமுல் நிறுவனத்துக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கும் முன்னைய அரசாங்கத்தின் உடன்பாட்டை தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் இரத்து செய்திருந்தது.

இலங்கையின் பால்உற்பத்தியை, இந்திய நிறுவனம் தன் கூட்டு முயற்சியின் கீழ் கொண்டு வருவதற்கு வழிவகுத்த அந்த உடன்பாடு இரத்து செய்யப்பட்டது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் உறவுகளில் சற்று நெருடலை ஏற்படுத்தியது.

இப்பொழுது அது சீராக்கப்பட்டிருந்தாலும், மீண்டும் அந்தக் கூட்டு ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கான முயற்சிகள் இந்தியத் தரப்பில் மேற்கொள்ளப்படுகின்றதா என்று தெரியவில்லை.

அதற்கான சூழலை உருவாக்கும் முயற்சியாக, இந்திய அரசாங்கம் குஜராத்தில் உள்ள 'அமுல்' பால் பண்ணை மற்றும் அதன் உற்பத்தி பிரிவுகளுக்கு ரில்வின் சில்வாவை அழைத்துச் சென்றிருக்கலாம்.

கேரளாவில், விழிஞ்ஞும் ஆழ்கடல் கொள்கலன் துறைமுகத்திற்கும் ரில்வின் சில்வா அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். இது அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகம். அதானி குழுமமே இதனை உருவாக்கியுள்ளது. இது முறையாக முழுமையாகச் செயற்படத் தொடங்கினால், கொழும்பு துறைமுகம் மீதான ஈர்ப்பு குறையும் என்ற அச்சம் இலங்கைக்கு இருக்கிறது.

இவ்வாறான நிலையில், விழிஞ்ஞும் துறைமுகத்திற்கு ரில்வின் சில்வா அழைத்துச் செல்லப்பட்டது, அது சார்ந்து எதிர்ப்புகள் வருவதை தவிர்ப்பதற்கு அல்லது வராமல் தடுப்பதை நோக்கத்தை கொண்டிருக்கலாம்.

விழிஞ்ஞும் துறைமுகம் தற்போதைய இலங்கை அரசாங்கத்தினால், அதிருப்தியுடன் பார்க்கப்படுகின்ற ஒன்று. அது கொழும்பு துறைமுகத்திற்கு நேரடியாக சவாலை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறான நிலையில், அந்தத் துறைமுகம் வெற்றிகரமாக செயற்படுகிறது என்ற கருத்தை நிறுவுவதன் மூலமாக, எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள துறைமுகங்களை இந்தியா நிர்வாகிப்பதற்கான சூழலை உருவாக்குகின்ற நோக்கமும் இருக்கலாம்.

எவ்வாறாயினும், ரில்வின் சில்வாவின் இந்தப் பயணம் அவரிடம் நீண்டகாலமாக காணப்பட்டு வந்த இந்திய எதிர்ப்பு வாதத்தை வலுவிழக்கச் செய்திருக்கிறது. அவர் நாடு திரும்பிய பின்னர் வெளிப்படுத்தியுள்ள கருத்து ஒன்றே அதற்குச் சான்று.

இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியின் போது, ஜே.வி.பி. இந்தியாவுக்கு எதிராக செயற்படவில்லை, என்றும், அப்போதைய இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கே பதிலளித்ததாகவும் கூறியிருக்கிறார்.

அதாவது, நாடு என்ற ரீதியாக (22ம் பக்கம் பார்க்க)

# மண்டைதீவு சர்வதேச விளையாட்டு அரங்கு சூழலியல் பேரழிவுக்கு வழி வகுக்குமா?





யாழ்ப்பாணத்தின் மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கு மற்றும் அதனுடன் இணைந்த 'விளையாட்டு நகரம்' திட்டமானது அந்தப் பகுதியின் தனித்துவமான இயற்கைச் சூழலுக்கு விடுக்கப்பட்டுள்ள மாபெரும் அச்சுறுத்தலாகும்.

40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையிலான இந்த விளையாட்டு அரங்கானது சுமார் 52 ஏக்கர் (21 ஹெக்டேர்) பரப்பளவில் நான்கு கட்டங்களாக நிர்மாணிக்கப்படவுள்ளது. எனினும், இத்திட்டம் எவ்விதமான முறையான சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளும் இன்றிஅவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமையானது பல்வேறு கேள்விகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

மண்டைதீவு தீவானது அலை மண்டலங்கள், மணல் நிறைந்த சேற்று நிலங்கள் மற்றும் கண்டல் காடுகளைக் கொண்ட ஒரு செழுமையான சூழலியல் அமைப்பாகும். இங்கு ஐந்து வகையான முக்கிய கண்டல் தாவர இனங்கள் (Avicennia marina Rhizophora mucronata போன்றவை) மற்றும் பல்வேறு வகையான உப்புநீர் சதுப்பு நிலத் தாவரங்களும் இயற்கையாகவே காணப்படுகின்றன.

அது மட்டுமன்றி இப்பகுதியானது பல்லுயிர்த்தன்மை கொண்டதாகவும் உள்ளது. தற்போது வரையிலான ஆய்வுகளின் பிரகாரம், 13 வகையான வண்ணத்துப்பூச்சிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, தேசிய ரீதியாக அழிவடைந்து வரும் உயிரினமாகப் பட்டியலிடப்பட்ட 'Yellow Pansy' (Junonia Hierta) என்ற வண்ணத்துப் பூச்சி இனம் இங்கு அதிகமாக வாழ்வது கண்டறியப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள கண்டல் காடுகள் வளிமண்டலக் கார்பனை உறிஞ்சி சேமிக்கும் முக்கிய களஞ்சியங்களாகச் செயற்படுகின்றன. குறிப்பாக ஒரு ஹெக்டெயரில் உள்ள கண்டல் காடுகள் சுமார் 1,000 மெற்றிக் தொன் கார்பனை உறிஞ்சுகின்றது என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே விளையாட்டு மைதானத் திட்டத்தினால் அழிக்கப்படும் 21 ஹெக்டெயரில் அழிக்கப்படும் கண்டல்காடுகள் யாழ்.குடாநாட்டின் சூழலியல் சமநிலையை நிச்சயமாக காலவோட்டத்தில் குழப்பவுள்ளது.

இதனை விடவும் கண்டல் காடுகள் இயற்கையாகவே பாதுகாப்பு அரணாக காணப்படுகின்றன. அதாவது, கடலரிப்பை தடுத்து, புயல் மற்றும் வெள்ளப் பெருக்கிலிருந்து நிலத்தைப் பாதுகாப்பதற்கும் தரைக்கீழ் நீர் உவர் நீராக மாறுவதை தடுப்பதற்கும் அது பெரும்பங்காற்றுகின்றது. அந்த வகையில் பார்க்கின்ற போது மண்டைதீவில் ஒட்டுமொத்தமாக விளங்கும் கண்டல் காடுகள் அழிக்கப்படுகின்றமையானது இயற்கை அரணை மனிதனே சீர்க்குலைப்பதாக உள்ளது.

மண்டைதீவு போன்ற பகுதியில் சாதாரணமாக கட்டுமானமொன்றை முன்னெடுப்பதாக இருந்தால் அதற்கான அனுமதியை உரிய அரச பங்குதாரர்களிடமிருந்து பெற வேண்டியது அடிப்படையாகும்.

அந்த வகையில் கிரிக்கெட் அரங்கு போன்ற பாரிய நிர்மாணத்தை மேற்கொள்வதாக அந்த அனுமதிகள் மிகவும் அவசியமாகின்றன. இருப்பினும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையில் சாத்தியக்கூறு ஆய்வு, ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்படவுமில்லை. அனுமதி அளிக்கப்படவுமில்லை.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் செப்டம்பர் 2025 இல் அனுமதி கோரப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் எவ்வித அனுமதியும் கோரப்படவுமில்லை, வழங்கப்படவுமில்லை. வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் 2025 அக்டோபரில் நடைபெற்ற ஆரம்பக்கூட்டத்தில் கலந்து கொண்ட போதிலும், திட்டப்பகுதியை இன்னும் திணைக்களம் நேரில் சென்று ஆய்வு செய்யவில்லை. நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்ப கட்ட திட்டமிடல் அனுமதியை மட்டுமே வழங்கியுள்ள நிலையில் வேறெந்த இறுதி அனுமதிகளையும் வழங்கவில்லை.

வேலணை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை இத்திட்டத்திற்காக அரச காணிகளை விடுவித்துள்ளது. சுமார் 19 ஹெக்டெயர் நிலம் 2022 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வேலணை பிரதேச சபை கட்டுமானங்கள் குறித்து எவ்வித அனுமதியையும் வழங்கவில்லை.

இதேவேளை, யாழ். சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கு கட்டுமானமானது உள்நாட்டு அடிப்படைச் சுற்றுசூழல் சட்டங்களை நேரடியாக மீறுவதாகவும் அமைகின்றது.

முதலாவதாக, கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவச் சட்டம் (மே. 57 மூக 1981): இச்சட்டத்தின் 14 மற்றும் 16 ஆம் பிரிவுகளின்படி, கரையோர வலயத்திற்குள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் முறையான 'சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை' அல்லது 'ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை' சமர்ப்பிக்கப்பட்டு, பணிப்பாளரின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால், 2025 செப்டெம்பர் முதலாம் திகதி அடிக்கல் நாட்டப்பட்ட போதும், மைதானத்துக்கான நிலத்துக்குரிய எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டு வேலி அமைக்கப்பட்ட போதும் எவ்வித மான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. தற்போதும் கூட அதே நிலைமை தான் நீடிக்கின்றது.

இரண்டாவதாக, தேசிய சுற்றுச்சூழல் சட்டம் (மே. 47 மூக 1980): இச்சட்டத்தின் 23 ஏஏ பிரிவின் கீழ், 4 ஹெக்டெயருக்கு மேற்பட்ட ஈரநிலங்களை நிரப்புதல் அல்லது ஒரு ஹெக்டெயருக்கு மேற்பட்ட காடுகளை மாற்றியமைக்கும் திட்டங்களுக்கு கட்டாயமாக 'சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை' அவசியமாகும். மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை இத்திட்டத்திற்கு இதுவரை எவ்வித அனுமதியும் வழங்கவில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (No. 16 of 1907): விளையாட்டு அரங்கின் எல்லைகள் அடையாளமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ள வேலியானது, 2019 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட மண்டைதீவு கண்டல் 'ஒதுக்கக் காடுகள்' (Reserved Forest) இருந்து வெறும் 100 மீற்றர் தொலைவிலேயே அமைந்துள்ளது. இச்சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி, ஒதுக்கக் காட்டுக்குள் அத்துமீறுதல், மரங்களை அழித்தல், நீர்நிலைகளை மாசுபடுத்தல் அல்லது வன உயிரினங்களுக்குத் தீங்கு விளைவித்தல் போன்றவை 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படக்கூடிய குற்றங்களாகும். கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகும் பட்சத்தில் குறித்த பகுதியில் ஈடு செய்ய முடியாத சேதங்கள் ஏற்படும். ஆனால், குறித்த ஒதுக்ககாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும் செயற்படுவதற்கும் உரிய அனுமதிகள் தற்போது வரையில் வழங்கப்பட்டதாக தகவல்கள் இல்லை.

இலங்கை, பாரிஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள நாடு என்ற வகையில் உலக வெப்பமயமாதலை 1.5 பாகை செல்சியஸுக்கு கீழ் குறைப்பதற்காக கார்பன் உறிஞ்சிகளைப் பாதுகாக்க வேண்டும்.

மேலும், பொதுநலவாய நாடுகளின் 'கண்டல் காடுகள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கை குழுவிற்கு' இலங்கை தலைமை வகிக்கிறது. அத்தகைய நிலையில், மண்டைதீவு போன்ற முக்கியமான 'நீல கார்பன்' சூழல் தொகுதியை அழிப்பதானது தனது தலைமைத்துவத்தையும் சர்வதேச நற்பெயரையும் நம்பகத்தன்மையையும் குலைப்பதாக உள்ளது.

இதேவேளை, மண்டைதீவு ஏற்கெனவே மழைக் காலங்களில் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகும் தாழ்நிலப் பகுதியாகும். 2025 நவம்பர் மாத சூறாவளியின் போதும் இப்பகுதி கடுமையாக வெள்ளத்தில் மூழ்கியது. இத்தகைய சூழல் உணர்திறன் மிக்க பகுதியில் 52 ஏக்கர் நிலத்தை நிரப்பி கட்டுமானம் செய்வது, அப்பகுதியின் நீரோட்டத்தைத் தடுத்து வெள்ள அபாயத்தை மேலும் தீவிரப்படுத்துவதாக உள்ளது. அது மட்டுமன்றி அப்பகுதியை மையமாகக் கொண்ட உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் வெகுவாகப் பாதிப்பதாக உள்ளது. மேற்படி விடயங்களை மையப்படுத்தியதாக இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவ தரப்பினரிடத்திலும் தனது கரிசனைகளை வெளிப்படுத்தியதோடு திட்ட மீளாய்வுக்கான கோரிக்கையை வெளிப்படுத்தியுள்ள போதும் இதுவரையில் எவ்விதமான பதிலளிப்புக்களும் செய்யப்படாமையானது பொறுப்புக்கூறலில் இருந்து முற்றாக விலகி நிற்கின்றமையை வெளிப்படுத்துகின்றது.

அவ்வாறான நிலையில், மண்டைதீவு சர்வதேச விளையாட்டு அரங்கு திட்டமானது அபிவிருத்திக்கும் சூழலியல் பாதுகாப்பிற்கும் இடையிலான முரண்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. ஆகவே, இயற்கையைப் பாதிக்காத வகையில் இத்திட்டத்தை முன்னெடுக்க மாற்று இடங்கள் குடாநாட்டில் தாராளமாக இருக்கும் போது, இந்தத் தீவுப்பகுதி ஏன் வலிந்து தெரிவு செய்யப்பட்டிருக்கிறது?

# எகியராஜயவும் இளங்கலைஞர் மன்றச் சந்திப்பும்

அண்மை மாதங்களாக அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்று ஒரு புதிய யாப்புருவாக்க முயற்சியைத் தொடங்கலாம் என்று கஜேந்திரக்குமார் எச்சரித்து வருகிறார். அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் அவ்வாறு உண்டு.

ரணில்–மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில் தயாரிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட இடைக்கால வரைபை அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்து செல்ல அரசாங்கம் முயற்சிக்கலாம் என்றும் கஜேந்திரகுமார் எச்சரிக்கின்றார்.

சில மாதங்களுக்கு முன்பு சுவிற்சர்லாந்தில் நடந்த ஒரு சந்திப்பில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வந்திருந்தவர் அவ்வாறு எகிய ராஜ்ஜிய என்று அழைக்கப்படும் அந்த இடைக்கால வரைபை



அடுத்த கட்டத்திற்கு முன்னெடுக்க விருப்பதாகத் தெரிவித்ததை கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டுகிறார். இந்த அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதனால் புதிய யாப்புருவாக்க முயற்சி ஒன்றில் இந்த அரசாங்கம் ஈடுபடத் தேவையான பலம் அதற்கு உண்டு என்றும் அவர் நம்புகிறார்.

எகிய ராஜ்ஜிய என்ற வரைபை அப்போதிருந்த அரசாங்கத்தோடு சேர்ந்து தயாரித்தது தமிழரசுக் கட்சியின் தலைமையிலான கூட்டமைப்பும் ஏனைய கட்சிகளும் ஆகும்.ஏனைய கட்சிகளுக்குள் ஜேவிபியும் அடங்கும். எனவே இந்த விடயத்தில் அந்த இடைக்கால வரைபு கூட்டமைப்பின் குழந்தையுந் தான். ஜேவிபியின் குழந்தையுந் தான். அதனால் அந்த வரைபை தமிழரசுக் கட்சியும் ஜேவிபியும் அதாவது அரசாங்கமும் இணைந்து முன்னெடுக்கும் ஆபத்துக்கள் இருப்பதாக கஜேந்திரக்குமார் சந்தேகிக்கிறார்.

பல வாரங்களுக்கு முன்பு அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் நடந்த ஒரு சந்திப்பின் பின் சுமந்திரன் தன்னுடைய எக்ஸ் தளத்தில் என்ன பதிந்தார் என்பதையும் கஜன் சுட்டிக் காட்டுகிறார். அந்தப் பதிவில் சுமந்திரன் எகிய ராஜ்ஜிய குறித்து ஆர்வமாக இருப்பது தெரிகிறது.

இத்தகையதோர் பின்னணியில் தான் கஜேந்திரகுமார் எகிய ராஜ்ஜியவுக்கு எதிராக முன்வைக்கும் விமர்சனங்கள் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணிக்கும் எதிரானவை தான் என்று தமிழரசுக் கட்சி நம்புகின்றது. தமிழரசுக் கட்சியை தமிழ்மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் உள்நோக்கம் அங்கே உண்டு என்றும் அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

இந்த முரண்பாடுகள், சந்தேகங்கள் என்பவற்றின் விளைவாகவே கடந்த 19ஆம் திகதி சுவிஸ் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஒரு வெளிநாட்டுத் தூதரகத்தின் அனுசரணையோடு தமிழ்க் கட்சிகளை ஒரே மேசையில் இருத்துவதற்கு எடுக்கப்பட்ட ஆகப்பிந்திய முயற்சி அது.அந்த முயற்சி குழப்பப்பட்டமையானது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்புகள் குறைவு என்பதைக் காட்டுகிறதா?

இந்த இடத்தில் மூன்று முக்கியமான விடயப் பரப்புகளில் தமிழ் மக்களுக்குத் தெளிவு அவசியம். முதலாவதாக அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வருமா?

இந்த அரசாங்கம் எதிர்பாராமல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற ஓர் அரசாங்கம். அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை கூட புரட்சிகரமானது அல்ல. கோத்தாபய பெற்ற அதே பெரும்பான்மை.எனவே இந்த வெற்றியை எப்படித் தக்க வைப்பது என்ற சவால் தேசிய மக்கள் சக்திக்கு உண்டு.

அண்மையில் ரில்வின் சில்வா சீனாவுக்குப் போனபோது அங்கே சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் அவருக்கு வழங்கிய ஆலோசனை தொடர்பாக சிங்கள ஊடகங்களில் வெளி வந்தது. குறைந்தது 15 ஆண்டுகள் ஆட்சி செய்தால் தான் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய மாற்றங்களைச் செய்யலாம் என்பதே அந்த ஆலோசனையாகும். அதன்படி தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது அதன் வாக்கு வங்கியை அடுத்தடுத்த கட்டங்களுக்கு எப்படி வளர்த்தெடுப்பது என்று தான் சிந்திக்கும். அப்படிச் சிந்தித்தால் இனப்பிரச்சினையில் கை வைக்கக்கூடாது. இதோ தீர்க்கப் போகிறோம் என்று ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்பலாம். அதன் மூலம் காலத்தைக் கடத்தலாம். மேலும் இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியின் விளைவு. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை நிமிர்த்த வேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு. அடுத்த தேர்தல்களில் கிடைக்கப் போகும் வெற்றியை அது தான் பெருமளவுக்குத் தீர்மானிக்கும். எனவே இந்த அரசாங்கம் இனப்பிரச்சினையில் கையை வைத்து நிலைமைகளைக் குழப்புமா? ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிலை நீக்குவதற்கே தயங்கும் அரசாங்கம் யாப்புருவாக்கத்தில் இறங்குமா?

இரண்டாவது விடயம், எகிய ராஜ்ஜிய பற்றிய வாதப்பிரதிவாதங்கள். சுமந்திரன் கூறுகிறார், அது ஒற்றை ஆட்சியைக் குறிக்காது என்று. மேலும் சுமந்திரன் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்போடு இணைந்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு புதிய ஆவணத்தைத் தயாரிக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார். கஜேந்திரகுமார் கூறுகிறார், எகிய ராஜ்ஜிய என்பது ஒற்றை ஆட்சிதான் என்று.

எகிய ராஜ்ஜிய தொடர்பாக யார் சொல்வது சரி என்பதை .அரசியலை ஓர் அறிவியலாகப் பயில்பவர்கள் விளங்கிக் கொள்ளலாம். ஆனால் பொதுமக்கள் அதை எப்படி விளங்கிக் கொள்கிறார்கள்? இந்த விடயத்தில் வெளிப்படையான, தெளிவான, சாதாரண மக்கள் விளங்கக் கூடிய விவாதப் பரப்புகள் அவசியம். அவ்வாறான விவாத அரங்குகளை தமிழ்மக்கள் மத்தியில் உள்ள குடிமக்கள் அமைப்புகளோ அல்லது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம். அல்லது தமிழ் சட்டத்தரணிகள் அமைப்பு போன்ற அமைப்புக்களோ திறக்க வேண்டும். அதன் மூலம் எகிய ராஜ்ஜிய வைச் சூழ்ந்திருக்கும் மயக்கங்கள் தெளிவாகப்பட வேண்டும்.

மூன்றாவது, இது மிகவும் முக்கியமானது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது நீண்ட தொடர் நடவடிக்கை. இதில் இறுதியிலும் இறுதியானது தான் யாப்புருவாக்கம். அதுவே முதலாவதும் கடைசியும் ஆகாது. இனப் பிரச்சனைக்கான தீர்வை யாப்புருவாக்கமாகக் குறுக்கவும் கூடாது. மாறாக இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் முயற்சியாக, மோதலில் ஈடுபட்ட தரப்புக்களுக்கு இடையிலான திறந்த உரையாடல் தேவை. அதன் மூலம் ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும். தேசங்களை அங்கீகரிக்கும் அந்த உடன்படிக்கையில் இருந்து தான் இனப்பிரச்சனைக்கான தீர்வு எது என்பதனை அதன் சட்டச் சட்டத்துக்குள் வைத்துச் சிந்திக்கலாம்.

இது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மோதலில் ஈடுபட்ட இனங்களுக்கு இடையே முதலில் ஒரு சமூக உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும். உதாரணமாக 1988இல் பிரித்தானியாவுக்கும் அயர்லாந்துக்கும் இடையில் எடுத்தப்பட்ட அமைதி உடன்படிக்கையான பெரிய வெள்ளி உடன்படிக்கை போல ஓர் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவையின் முன்மொழிவின் முகப்புரையில் கூறப்பட்டுள்ளது. அங்கிருந்து தான் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடத் தொடங்க வேண்டும். அதன் இறுதிக் கட்டந்தான் புதிய யாப்பாகும். யாப்பிலிருந்து அதாவது கடைசிக் கட்டத்தில் இருந்து அதைத் தொடங்க முடியாது. தொடங்கவும் கூடாது.

இங்கே விபத்து எங்கே நடந்தது என்றால், 2015 செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான அதாவது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானத்தின் விளைவாகத் தான். பொறுப்புக் கூறலுக்கான ஐநா தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. எனவே அந்தப் பொறுப்பின் நிமித்தம் நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு, அதன் கீழ் ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக வழிநடத்தல் குழுவும் உப குழுக்களும் உருவாக்கப்பட்டன. இந்த நடைமுறைகளின் விளைவு தான் எகிய ராஜ்ஜிய என்று அழைக்கப்படுகின்ற இடைக்கால வரைபு ஆகும்.

2018ல் அந்த இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலச் சூழலில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தை ஒரு யாப்புச் சதி முயற்சி மூலம் கவிழ்த்தார். அதாவது நிலைமாறுகால நீதியின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரி தன் குழந்தையைக் காட்டிக் கொடுத்தார். நிலைமாறுகால நீதி என்பது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



என்று சுமந்திரன் 2021ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்துக் கூறினார் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்கான சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு சொன்னார். தோல்வியுற்ற ஒரு பரிசோதனை எப்படி வெற்றிகரமான ஒரு தீர்வு முன்மொழிவைப் பெற்றெடுத்தது?

நிலைமாறுகால நீதியின் தோல்விக்குக் காரணமே நிலை மாற்றம் நிகழாமல் அங்கே நிலைமாறுகால நீதியை ஸ்தாபிக்க முற்பட்டமை தான். இலங்கைத் தீவைப் பொறுத்த வரையிலும் அது வென்றவர்கள் தோற்றவர்களின் மீது திணித்த ஒரு நீதிதான். தென்னாபிரிக்காவைத் தவிர பெரும்பாலான நிலை மாறு கால நீதிக் களங்களில் நிலைமை அதுதான். நூரம்பேர்க் தீர்ப்பாயத்தில் தொடங்கி இலங்கை வரையிலும் நிலைமாறுகால நீதிச் செய்முறைகள் பெரும்பாலும் அவ்வாறு தான் காணப்படுகின்றன. வென்றவர்கள் தோற்றவர்களுக்கு வழங்கும் நீதி. எனவே இனப்பிரச்சனைக்கான தீர்வை யாப்புருவாக்கமாகக் குறுக்கக்கூடாது. மாறாக, அதை இனங்களுக்கு இடையிலான உடன்படிக்கையில் இருந்து தொடங்க வேண்டும். மிகக் குறிப்பாக அதற்கு மூன்றாவது தரப்பின் கண்காணிப்பும் மத்தியஸ்தமும் வேண்டும்.

அவ்வாறு மூன்றாவது தரப்புக்கள் தலையிடுவது என்று சொன்னால் தமிழ் மக்கள் போராட வேண்டும். தமிழ்மக்கள் நொதித்தால் தான் இலங்கைத்தீவின் அரசியல் வலுச்சமநிலை குழம்பும். இலங்கைத் தீவின் அரசியல் வலுச்சமநிலை குலையும் போது தான் மூன்றாவது தரப்புகள் அதில் தலையிடும். இந்திய–இலங்கை உடன்படிக்கை, ரணில்–பிரபாகரன் உடன்படிக்கை இரண்டும் அவ்வாறு தமிழ்மக்கள் நொதித்தபடியால் கிடைத்தவை தான். நிலைமாறு கால நீதிகூட மகிந்தவைத் தோற்கடிப்பதற்கான இந்திய மற்றும் அமெரிக்கத் தேவைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மஹிந்தவைத் தோற்கடிப்பதற்கான ஆட்சி மாற்றத்தில் தமிழ் முஸ்லிம் மக்களையும் பங்காளிகள் ஆக்கிய வெளியரசுகள் இலங்கைத்தீவில் மறைமுகமாக ஐநாவுக்கூடாக ஒரு தலையீட்டைச் செய்தன.

எனவே தமிழ் மக்கள் நொதிக்கவில்லையென்றால் மூன்றாவது தரப்புகள் தலையிடாது. மூன்றாவது தரப்புகளின் கண்காணிப்பு இல்லாமல் நாடாளுமன்றத்திற்கு ஊடாக ஒரு தீர்வைப் பெற முடியாது. அப்படிப் பெற விளைந்தால் அது அனேகமாக மைத்திரிபால சிறிசேன கூறியது போல சிங்கள மக்களையும் பயமுறுத்தாத தமிழ் மக்களையும் பயமுறுத்தாத ஏதோ ஒரு எகிய ராஜ்ய வாகதான் இருக்கும்.

வெளிப்படையான சமஸ்டியாக இருக்காது. நாடாளுமன்றத்துக்கூடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வைப் பெற (22ம் பக்கம் பார்க்க)

# திம்புக்கோட்பாடு:- தான் போக வழியில்லையாம்...

கட்டுரையாளர்:-
- அழகு குணசீலன் -

அரசியல் கோரிக்கை ஒன்றுக்கு அதற்கான பெறுமானத்தை, அடைவுக்கான வாய்ப்பு வசதிகளை வழங்குவது அதற்கான காலச் சூழல். மற்றும் கோரிக்கையின் உள்ளடக்கத்தின் ஜதார்த்தம் மற்றும் நடைமுறைச் சாத்தியம். அடுத்து கோரிக்கையை முன் வைக்கும் தரப்பினரதும், கோரிக்கையை நிறைவு செய்யும் தரப்பினதும் அரசியல் பலம் - பலவீனம். மேலும் கோரிக்கையை முன் வைத்த தரப்பு அதை அடைவதற்காக மறுதரப்புக்கு கொடுக்கக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல் அழுத்தம்.

இந்த வகையில் தமிழ்தேசிய அரசியல் இனப்பிரச்சினைக்கு தீர்வாக மீளுருவாக்கம் செய்துள்ள காலாவதியான திம்புக்கோட்பாடு மேற் குறிப்பிட்ட அவசியமான நிபந்தனைகளை எந்தளவுக்கு பூர்த்தி செய்கிறது? வேதாளங்கள் ஏன் மீண்டும் முருங்கையில் ஏறி முறிந்து விழப்போகின்ற விசப் பரீட்சையில் இனப்பிரச்சினை தீர்வுக்கு நஞ்சூட்டுகின்றன?

1985இன் யூலை - ஆகஸ்ட் மாதங்களில் அன்றைய தேசிய, பிராந்திய பூகோள அரசியல் சூழலில் முன் வைக்கப்பட்ட திம்புக்கோட்பாட்டின் நான்கு அம்சங்கள் ஈழத்தமிழர்களின் அரசியல் வாழ்வியலில் இன்றைய இலங்கையின் அரசியல் சூழலில் பொருத்தமானவையா? தேசிய இனம் ஒன்றின் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்ட வரையறைகளோடு திம்பு கோட்பாடு ஒத்துப் போகிறது என்பது ஒரு சட்ட அணுகுமுறை. ஆனால் அந்த சட்டத்தன்மை - அங்கீகாரம் மட்டும் சாதிப்பதற்கு போதுமானது அல்ல. வேண்டுமானால் மீண்டும் சர்வதேசம், ஐ.நா, ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் ட்ரம்பின் சமாதான சபை போன்றவற்றுடன் கயிறிழுக்கவே உதவும்.

திம்புக் கருத்தியலுக்கு வயது 40. தமிழ்த்தேசிய சமஷ்டி அரசியலுக்கு வயது 75 என்று கூறுகிறார்கள். ஆயுதப்போராட்டம் கூட்டிக் கழித்தால் முப்பது 30 வயதில் மௌனித்து விட்டது. மௌனித்து 16 ஆண்டுகள் வெறும் முட்டுக் கொடுப்பிலும், முரண்டு பிடிப்பதிலும் கடந்து இருக்கிறது. தமிழ்த்தேசிய அரசியல் புத்திசாலிகள் நிலைமாறு காலம், திரட்சி, மண்ணாங்கட்டி என்று வார்த்தையாடல்களையே செய்கிறார்கள். நிலைமாறு காலத்தில் இவர்கள் முள்ளிவாய்க்கால் நந்திக்கடவில் இருந்து கற்றுக் கொண்டு இனப்பிரச்சினைக்கான வீதி வரைபடத்தில் செய்த மாற்றங்கள் என்ன? நிலை மாறுகாலம் வழங்கிய கால இடைவெளியில் தமிழ்த்தேசிய அரசியல் பலவீனமானதைத் தவிர.

இந்த சூழலில் தமிழ்த்தேசிய அரசியல் கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன? இந்த சட்ட உரிமைக் கோரிக்கைகளின் இலக்கு அடையப்படாமல் போனமைக்கு கொழும்பு அரசு மட்டும் தான் காரணமா? தமிழ்த்தேசிய அரசியல் தலைமைகளுக்கும் அதில் பங்குண்டா? இல்லையா? முரண்பாடு இரு தரப்புக்களுக்கு இடையிலானது என்றால் அதற்கு இரு தரப்பும் பொறுப்பு. அந்த முரண்பாட்டை தீர்ப்பதிலும் இரு தரப்புக்கும் பொறுப்பு உண்டு. ஒரு தரப்பை மட்டும் பொறுப்புக் கூற கட்டாயப்படுத்துவது சம்பந்தப்பட்ட மறு தரப்பு எதையோ மறைக்க விரும்புகிறது என்பதை காட்டுகிறது. அதில் சுய அரசியல் பலவீனமும், தமிழ்மக்கள் சர்வதேசத்தை நம்பச் செய்யுமாறு விடும் புரூடாக்களும் அடங்கும்.

திம்புக்கோட்பாட்டின், இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு ஒரு பாரம்பரிய தாயக பிரதேசம் இருக்கிறது, அவர்கள் சுயநிர்ணய உரிமையை கொண்டவர்கள் என்ற மூன்று அம்சங்களும் நான்காவது அம்சமாக இலங்கையர்கள்



அனைவருக்கும் குடியுரிமையும் வலியுறுத்தப்பட்ட பிரகடனமே திம்பு பிரகடனம். இதில் குடியுரிமை விவகாரம் மலையக தமிழர்களை அடிப்படையாகக் கொண்டது. அது பெரும்பாலும் தீர்க்கப்பட்டு விட்ட ஒரு பிரச்சினை. அதை மலையக அரசியல் தலைமைகள் எவ்வாறு தீர்த்துக கொண்டன என்பதையும், அதுவும் வட்டுக்கோட்டை தனிநாடு கோரிக்கை தீர்மானம் மலையகத் தமிழர்களுக்கு பொருத்தமற்றது என்று கூறி மலையக அரசியல் தலைமை தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து வெளியேறி, இணக்க அரசியல் மூலம் இந்த வாக்குரிமை இலக்கை அடைந்தது என்பதும் தமிழ்த்தேசிய அரசியல் கற்றுக் கொள்ள வேண்டிய பாடத்திட்டத்தில் அடங்கும்.

இன்று ஈழத்தமிழர்கள் இந்தியாவில் குடியுரிமை அற்ற, ஒரு அகதிக்குழுமமாக மாறியிருக்கிறார்கள். 89 ஆயிரம் என்பது தட்டிக் கழிக்க கூடிய ஒரு தொகையா? இது நீங்கள் கூறுகின்ற திம்புக்கோட்பாட்டு பாரம்பரிய தாயகத்தில் ஏற்படுத்தியுள்ள சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்கள் எத்தனை? அதில் இருந்து மீள கடந்த பதினாறு ஆண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியலின் வகிபாகம் எதையும் செய்யவில்லை. அந்த மக்களை போர் துரத்தியது என்றால், போரின் பங்காளிகளான தமிழ்த்தரப்புக்கு அதில் பங்கில்லையா?

ஒரு சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் தேவைகளும், அவற்றிற்கான கோரிக்கைகளும், அதை அடைவதற்கான வழிமுறைகளும் 75, 50, 30, 16 ஆண்டுகளாக எவ்வாறு மாற்றம் அன்றி இருக்கமுடியும். இந்த நிலைப்பாடு மக்கள் வாழ்வியலின் இயங்கியலுக்கு முரண்பட்டதில்லையா? இந்த காலப்பகுதிகளில் பூகோள சமூக, பொருளாதார, அரசியல் வரைபடம் சர்வதேசத்திலும், பிராந்தியத்திலும், இலங்கையிலும் எவ்வளவு மாற்றங்களை சந்தித்திருக்கிறது. அந்த மாற்றங்களுக்காக எவ்வளவு புதிய அணுகுமுறைகள், கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. தலைமைத்துவம், சிந்தனை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் எங்களுடைய ஆட்டுக்கல்லிலும் மாற்றம் இல்லை, அதற்குள் போடும் மாவிலும் மாற்றம் இல்லை.☐ ஆட்டும் அணுகு முறையிலும் மாற்றம் இல்லை. சமூக அரசியல் இயங்கியல் நியதியில் இது எப்படிச் சாத்தியம்? தமிழ்த்தேசிய அரசியல் பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி அந்த ஆல மரத்திற்கு கீழ் மட்டும் நின்று சுழல்வதை தவிர்த்து தனது சுழல் பாதையை புதிதாக நிர்ணயம் செய்து விரிவுபடுத்த வேண்டும். இந்த மரபுவழியான சுற்று வட்டத்தை தகர்த்து விலகி வட்டத்திற்கு வெளியே புதிய பாதையில் சுழல வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

1976 வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பொலிஷ் பண்ணப்பட்ட வடிவம் திம்புக் கோட்பாடு. பிரிந்து செல்வதற்கான உரிமையை கொண்ட சுயநிர்ணய உரிமையை அது கோருகிறது. வட்டுக்கோட்டை, திம்பு, திருகோணமலை மந்திரங்களான ஊர்களின் பெயர்களை கழட்டி விட்டால் மறைமுகமாக எல்லாம் தனிநாட்டுக்கு முலாம் பூசப்பட்டவை. இன்னொரு வகையில் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றத்தை சட்டத்தின் பிடியில் மாட்டுப்படாமல், அலங்கரிப்பதற்காக இந்த முலாம் பூசப்படுகிறது. பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சமஷ்டியும் அது தான். ஒருநாடு இருதேசமும் அது தான்.

ஆகக் குறைந்த பட்சம் இன்றைய ஆட்சியாளரான ஜே.வி.பி.யின் வளர்ச்சி -மாற்றம் பற்றியாவது தமிழ்த்தேசிய அரசியல் சிந்தித்துள்ளதற்கான அறிகுறிகளை தேடியும் காணமுடியவில்லை. 1965கால ரோகண விஜயவீரவின் தலைமையிலான கொள்கைகளோடு ஜே.வி.பி. அரசியல் செய்து இன்றைய நிலையை அடைந்திருக்க முடியுமா? சோஷலிசப் புரட்சிக்காக பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையற்று ஆயுதம் ஏந்தியவர்கள் ஜே.வி.பி.யினர். அவர்களிடையே கொள்கை முரண்பாடுகளின் போது தலைமை மாற்றங்கள் ஏற்பட்டன. தலைமை மாற்றம், சிந்தனையிலும், கொள்கைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது . ஜே.வி.பி. தனது இரு போராட்டங்களினதும், ரோகண விஜயவீர கொலை செய்யப்பட்ட தன் பின்னரும் தன்னை மறுவார்ப்பு மீளுருவாக்கம் செய்தது. அதன் விளைவு தான் ஜே.வி.பி. என்.பி.பி.யாக மறு பிறப்பு எடுத்தது.

அவர்கள் சாகும் வரை, ஆயுட்கால தலைமைத்துவத்தை ஆராதிக்கவில்லை வழிபடவில்லை . எம்.ஏ. சுமந்திரன் இரா.சம்பந்தர் தலைமைப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கூறிய போது தமிழ்த்தேசிய புத்திசாலிகள் - பக்தர்கள் சுமந்திரனை எதிர்ப்பதற்காக அதை எதிர்த்து முதுமை அரசியலை அங்கீகரித்தனர். ஜே.வி.பி. என்.பி.பி.யாக ஒரு முறை தன்னை உருமாற்றம் செய்துள்ளது. தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அது போன்று தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த்தேசிய பேரவை இந்த உருமாறங்கள் ஏற்படுத்திய ஆக்கபூர்வமான கொள்கை மாற்றங்கள் எதுவும் உண்டா? அனைத்தும் கதிரைகளுக்கானதே அன்றி மக்களின் விடிவுக்கானதல்ல

ஜே.வி.பி.யில் சமூக இயங்கியல் சார்ந்து ஏற்பட்ட மாற்றங்கள், பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக மாற்றங்களை செய்ய முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆட்சி அதிகாரங்களை பெறும் உரிமைகளுக்கு அப்பால் மக்கள் எதிர்நோக்கிய, சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை அவர்கள் பேசினார்கள். ஆட்சி மாற்றத்திற்கான சூழல் ஒன்று ஏற்பட்டபோது அதை பயன்படுத்தி கொண்டார்கள். ஆட்சியில் அமர்ந்த போது 1971 கிளர்ச்சியின் அடிப்படையாக அமைந்த இந்திய மேலாதிக்க எதிர்ப்பு வாதம் காணாமல் போனது. வெளியுறவுக் கொள்கையில் கட்சிக்குள் மாற்றம் செய்யப்பட்டது. ஒரு நீண்ட கால இலக்கில் நிலவுகின்ற சர்வதேச பூகோள, பிராந்திய சூழலை பயன்படுத்தி கொள்கிறார்கள். தேர்தல் வாக்குறுதிகளுக்கும் இன்றைய அரசியல் அணுகுமுறைகளுக்குமான இடைவெளி சார்ந்த விமர்சனங்களுக்கு அப்பால், இதற்கு பெயர் பூகோள அரசியலுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய காலத்திற்கு ஏற்ற ஜதார்த்த அரசியல். இதை ஜே.வி.பி. தனது கடந்த 30 ஆண்டு கால நிலைமாறு காலத்தில் ஆரம்பித்தது.

ஈழத்தமிழர்கள் தனிநாடு கோரிய மக்கள் கருத்துக்கணிப்பு 1977 பாராளுமன்றத்தேர்தல் என்று கூறப்படுகிறது. அந்த முடிவுகள் 50 ஆண்டுகள் கடந்தும் இன்னும் செல்லுபடியாகுமா? அன்று முஸ்லீம் மக்களினதும் வாக்குகளை புத்தளம் வரை கூட்டி அள்ளியே கருத்துக் கணிப்பு தேர்தல் வாக்களிப்பு மட்டுமட்டாக 50 வீதத்தை சற்று தாண்டியது. இது அ.அமிர்தலிங்கம் கணித்த கணிப்பு. இன்று முஸ்லீம் மக்களின் அரசியல் பாதை என்ன? அவர்களை அந்த பாதைக்கு வலிந்து தள்ளியது தமிழ்த் தேசிய அரசியல். தமிழ்மக்களின் அரசியல் பாதையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை 1977 பின்னரான பாராளுமன்ற தேர்தல்களில் தொடர்ச்சியாக அவதானிக்க முடிகின்றது.

தனிநாடு சுயநிர்ணயம் பிரிந்து செல்லும் உரிமை சமஷ்டி என்பவற்றிற்கு எதிராக தமிழ்மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். இன்று மாகாணசபை தீர்வுக்கு வாக்களிப்பார்களா? என்ற கேள்வியை எழுப்ப வேண்டிய அரசியல் சூழல் நிலவுகிறது. அந்தளவுக்கு வடக்கு கிழக்கில் ஜே.வி.பி.கடந்த ஒன்றரை ஆண்டுகளில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. ஜே.வி.பி. கூறுகின்ற புதிய அரசியல் அமைப்பு(22ம் பக்கம் பார்க்க)

# நாட்களைக் கடத்தும் ஆளும் கட்சியும் இடம் கொடுக்கும் தமிழ்க்கட்சிகளும்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தேசிய மக்கள் சக்தியும் தீர்வைத் தரப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது. எந்தப் பிரச்சினைக்கும் எந்தப் பதிலையும் உறுதியாகவோ வெளிப்படையாகவோ சொல்லாமல் தந்திரமாக நாட்களைக் கடத்தும் உபாயத்தைக் கையாள்கிறது NPP அரசாங்கம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, மாகாண சபைகளுக்கான தேர்தல், வடக்குக் கிழக்கில் பௌத்த சிங்கள விரிவாக்கச் செயற்பாடுகள், பொருளாதார மறுசீரமைப்பு புதிய பொருளாதார முன்னெடுப்பு, மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைப் பிரச்சினைகள் என எதற்கும் பொறுப்பான பதிலை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவோ, பிரதமர் ஹரிணி அமரசூரியவோ சொல்வதில்லை. மட்டுமல்ல, ஒவ்வொரு பிரச்சினையையும் எந்த அடிப்படையில் எவ்வளவு கால எல்லைக்குள் தீர்வு காண்பது என்றும் பேசுவதில்லை. அல்லது ஒவ்வொரு விடயத்தையும் எந்த அடிப்படையில், எவ்வளவு கால எல்லைக்குள் முன்னெடுத்துச் செயற்படுத்துவது என்றும் கூறுவதில்லை.

பதிலாக இவை தொடர்பாக பிரதி அமைச்சர்கள், NPP யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் அங்கங்கே சில வார்த்தைகள் சொல்லப்படும். அதாவது அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளில் அக்கறையோடு செயற்படுகிறது. நிச்சயமாக மாற்றங்களை உருவாக்கும் என்று அவர்கள் அங்கங்கே சொல்லி, எல்லாவற்றுக்கும் தீர்வு காணும் அக்கறை அரசாங்கத்துக்குண்டு என்றவொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். இது தேசிய மக்கள் சக்தியின் ஆளும் நிலைப்பாட்டுக்கான உபாயமாகும்.

இந்த மாதிரியானதொரு உபாயத்தையே முன்பு ரணில் விக்கிரமசிங்கவும் கையாண்டு வந்தார். எதையும் உரத்த குரலிலோ, உறுதிபடவோ ரணில் சொல்வதில்லை. ஆனால், தந்திரமாகக் காய்களை நகர்த்துவார். ஐம்பது ஆண்டுக்கும் அதிகமான அரசியல் வரலாற்றைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க ஐந்து தடவைக்கு மேல் பிரதமராக இருந்திருக்கிறார். ஒரு தடவை ஜனாதிபதியாகப் பதவி வகித்திருக்கிறார். அரசியல் வாழ்வைத் தொடங்கிய காலத்திலிருந்து பல்வேறு துறைகளின் அமைச்சராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார். இப்படியெல்லாம் இருந்தும் இலங்கையின் எந்த நெருக்கடிக்கும் ரணில் விக்கிரமசிங்க தீர்வைக் கண்டதேயில்லை. ஆனால், வெற்றிகரமாக அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தன்னுடைய அரசியற் காலத்தைக் கடத்திக் கொண்டார்.

ஏறக்குறைய அநுரகுமார திசநாயக்கவும் இத்தகையதொரு உபாயத்தை தந்திரத்தைத் தான் கையாள்கிறார். ஆனால் தேசிய மக்கள் சக்தி, இனப்பிரச்சினைக்கு மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரும் தீர்வை எட்டும் என்று சிலர் அடித்துச் சொல்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கு எதைப் பரிசாகக் கொடுப்பது என்று தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தேசிய மக்கள் சக்தியும் அதற்குத் தலைமை தாங்கும் அநுரகுமார திசநாயக்கவும் சர்வரோக நிவாரணிகள். இதொரு முட்டாள்தனமான நம்பிக்கை. அடிப்படைகளற்ற எந்த நம்பிக்கையும் முட்டாள்தனமானதே.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்து ஓராண்டு முடிந்து விட்டது. அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதிப் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டுகளாகிறது. போதைப்பொருள் ஒழிப்பு, ஊழல் தடுப்பு, ஊழல்வாதிகள் கைது, புதிய கல்விக் கொள்கைக்கான ஏற்பாடுகள் என்றவாறாக நடவடிக்கைகள் அமைந்துள்ளனவே தவிர, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியைக் காண்பதற்கான புதிய பொருளாதாரக் கொள்கையோ, திட்டமோ இன்னும் உருவாக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகள் நடப்பதாகவும் தெரியவில்லை. அப்படித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் காணமுடியவில்லை. குறைந்த பட்சம் தீர்வுக்கு முன்னர் நடைமுறைப்படுத்த வேண்டிய மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கே அரசாங்கம் பின்னடிக்கிறது. தேர்தல் நடக்கும் என்று NPP யின் ஒரு தரப்புச் சொல்கிறது. தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்று NPPயின் இன்னொரு தரப்பு மறுக்கிறது. இது திட்டமிட்ட ஏய்ப்பு அன்றி, வேறென்ன?

அரசியலமைப்பு மாற்றம் நடக்கும் என்று ஒரு தரப்புச் சொல்கிறது. அது இப்போதில்லை என்று இன்னொரு தரப்புக் கூறுகிறது. இதையெல்லாம் எப்படி விளங்கிக் கொள்வது? அல்லது இந்த மாதிரிச் செயற்பாடுகளுக்கு என்ன பெயர்?

ஏற்கனவே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப்பொருள் ஒழிப்பு, ஊழல் தடுப்பு, ஊழல்வாதிகள் கைது, புதிய கல்விக் கொள்கைக்கான ஏற்பாடுகள் போன்றவற்றிலும் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று சொல்ல முடியவில்லை. கல்விக் கொள்கையை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பதையும் விட அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கும் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணியை எதிர்த்து முடக்குவதற்கே NPPக்குள்ளும் வெளியிலும் மும்முரமான முயற்சிகள் நடக்கின்றன. ஊழல்வாதிகளைக் கைது செய்வதிலும் பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை. அதாவது வெளியே சொல்லப்பட்ட மக்களுக்கு உறுதி அளித்த அளவுக்கு முந்திய ஆட்சியாளர்களில் (ஊழல்வாதிகளில்) NPP கை வைக்கவில்லை. இது வரையில் பிடித்து உள்ளே போடப்பட்டிருப்பவர்கள் ஓரத்தில் இருந்த சிறிய எறும்புகளே. என்பதால் தான் NPPயின் மீது கேள்விகளும் சந்தேகமும் வலுக்கிறது.

இதேவேளை இலங்கையின் இன்றைய அரசியல் யதார்த்தத்தில் NPPக்குப் பதிலாக — மாற்றாக வேறு தெரிவுகள் இல்லை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். NPPயைத் தவிர்த்தால், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்கலாமா என்றால், சஜித் தான் கடந்த ஆட்சியில் 1000விஹாரைகள் திட்டத்தை உருவாக்கிய நாயகனாக இருக்கிறார். இலங்கைக்குத் தேவை தொழிற்சாலைகளே தவிர, விஹாரைகளோ, தேவாலயங்களோ, கோயில்களோ, மசூதிகளோ இல்லை.

உலகத்திடம் கையேந்தி, கடன் வாங்கி ஆட்சியை நடத்தும் அரசாங்கத்தின் நிதியில் மத நிறுவனங்களை வளர்ப்பது மூடத்தனத்தை வளர்ப்பதாகவே அமையும். அப்படியான ஒருவரை எப்படி நம்பி ஏற்றுக் கொள்வது? அடுத்தது பொதுஜன பெரமுன. இந்த நாட்டைக் கொள்ளையடித்துக் குட்டிச்சுவராக்கியவர்கள் என்று பகிரங்கமாகவே குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ராஜபக்ஸவினரை எந்த அடிப்படையில் மறுபடியும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவது? மட்டுமல்ல, அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு எதிர்வளமாகச் சிந்திப்பவர்கள். ஆகவே அவர்களும் பொருத்தமான தெரிவல்ல. மிஞ்சுவது, சக்குப் பிடித்துப் போன ரணில் தரப்புத் தான். அவர்கள் தானே எதற்குமே பொருத்த மற்றவர்கள் என்று சனங்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றால், இனி எந்த அடிப்படையில் அவர்களை அப்படியே ஏற்றுக் கொள்வது?

இது தான் மிகப் பெரிய துயரமும் அவலமுமாகும். இதுதான் NPPக்கும் வாய்ப்பாக உள்ளது.

இந்த யதார்த்தப் பின்னணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எப்படிக் கையாள்வது என்ற கேள்வி எழுகிறது. இதில் ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு விதமாகச் சிந்திக்கின்றனர். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படாமல் விட்டாலும் பரவாயில்லை. புதிய அரசியலமைப்பு வந்தாலென்ன, விட்டாலென்ன? மாகாணசபைத் தேர்தல் நடந்தால் என்ன? நடக்காமல் போனாலென்ன? இனிமேல் ஊழலற்ற, பொருளாதார சுபீட்சத்தை நோக்கிய ஒரு ஆட்சி இருந்தால் போதும் என்றே அவர்கள் சிந்திக்கிறார்கள். இது பெருந்திரள் சிங்கள மக்களை அடிப்படையாகக் கொண்ட அவதானிப்பும் கருத்துமாகும். இதை உள ரீதியாக நிறைவு செய்யக் கூடிய அளவுக்கு அரசாங்கத்தின் எளிமையான நடவடிக்கைகளும் ஜனாதிபதி, பிரதமர் போன்றோரின் தனிப்பட்ட பகிரங்க நடமாட்டங்களும் அமைகின்றன. மிக எளிமையாக, தாங்கள் நெருங்கிப் பார்க்கக் கூடிய ஒருவராக ஜனாதிபதி இருக்கிறார் என்பது பெரும்பாலான மக்களுடைய எண்ணமாகும். ஆக, அநுரகுமார திசநாயக்க என்ற தங்கக் குதிரை உள்ளவரை தேசிய மக்கள் சக்தியின் கதிரைக்குப் பிரச்சினையில்லை.

தமிழ்ச் சமூகத்தில் முக்கியமாக இரண்டு விதமான நோக்குநிலையைக் கொண்ட தரப்புகள் உண்டு. ஒன்று, தேசிய மக்கள் சக்தியை நம்பி, அந்த மாயக்குதிரைக்குப் பின்னால் மகிழ்ச்சியோடு செல்லும் செல்ல விரும்பும் தரப்பு. மற்றது, NPPயை நம்ப முடியாது என்று வெளியே நிற்கும் தமிழ்த்தேசியவாதத் தரப்பு. இதற்குள் சிறிய குட்டிக்குட்டி அணிகள் உண்டு. அடிப்படையில் அவையெல்லாம் ஒரு தரப்பே. ஆனால், இரண்டு தரப்புகளும் இன்றைய நிலையில் அரசியல் வலுவற்றவையே.

தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் தரப்பு, எந்த வகையிலும் அரசாங்கத்தில் செல்வாக்கைச் செலுத்த முடியாத ஒன்றாகவே உள்ளது. குறைந்த பட்சம், வடக்குக் கிழக்கில் உள்ள எந்தச் சிறிய தனித்துவமான எத்தகைய வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கக் கூடியதாக இல்லை. இதற்கு இரண்டு எளிமையான உதாரணங்களைச் சொல்ல முடியும்.

1.மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துங்கள். அது தமிழ்பேசும் மக்களுடைய எதிர்பார்ப்பும் அடிப்படைத் தேவையுமாகும் என்பதை NPPஐ ஆதரிக்கும் தமிழ் பேசும் ஆதரவாளர்களும் சரி, NPPயில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள், நகரசபை, மாநகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்பேசும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என ஒரு பெரிய குழாத்தினர் இருக்கின்ற போதும் பேசுவதோ, அழுத்தம் கொடுப்பதோ இல்லை. அப்படி அழுத்தம் கொடுக்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை என்பது மட்டுமல்ல, NPPயும் இடமளிப்பதில்லை.

2.வடக்குக் கிழக்கில் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறைத் துறைமுகம், ஆனையிறவு உப்பளம், கிழக்கில் பிற தொழிற்சாலைகள் உள்ளிட்ட எதையும் சீராக முழுமையான அளவில் விரிவாக்கம் செய்து வளர்த்தெடுப்பதற்கு அரசாங்கத்தைக் கோரவோ, பொறுப்பெடுத்துச் செயற்படுத்தவோ முடியாதவர்களாகவே உள்ளனர். (22ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவில் இருந்து டில்வின் என்ன கற்றார்?

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



இலங்கையில் மாறிக் கொண்டிருக்கும் அரசியல் நிலவரத்தின் மையத்தில் ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச்செயலாளர் திரு தில்வின் சில்வா அவர்கள் இந்தியாவுக்குச் செய்த தனது முதல் உத்தியோகபூர்வப் பயணத்திலிருந்து என்ன பாடங்களை கற்றார்?

2026 பிப்ரவரி 5 முதல் 12 வரை இந்திய கலாசார உறவுகள் கவுன்சில் (ICCR) நடத்திய சிறப்பு விருந்தினர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணம், சித்தாந்தத்திலும் நடைமுறை ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

இந்தியாவில் தங்கியிருந்த போது, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருடன் அவர் கலந்துரையாடினார். மேலும், இந்தியாவின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் முன்மாதிரிகளாகக் கருதப்படும் குஜராத் மற்றும் கேரளா மாநிலங்களையும் பார்வையிட்டார்.

அவரது அனுபவப் பகிர்வுகளில் வாய்ப்பும் சவாலும் இணைந்திருந்தன. ஒருபுறம், இலங்கையில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்த இந்திய அரசியல் அழுத்தம் செலுத்துவதற்கு மாறாக, அபிவிருத்தி மற்றும் புதுமையை முன்னிறுத்துவதே இந்தியாவின் கவனம் என அவர் கவனித்தார்.

மறுபுறம், இந்தியா மற்றும் சீனாவின் வளர்ச்சி மாதிரிகளை ஒப்பிட்டு அவர் கூறிய கருத்துகள், இலங்கை எதிர்காலப் பாதையைத் தீர்மானிக்க எந்த மாதிரியை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்ற விவாதத்தை எழுப்புகின்றன.

இந்தியாவில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் உள்ளன. ஆனால் மத, கலாசார மரபுகள் போன்ற அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய நிலை இருப்பதால் சில தடைகள் ஏற்படுகின்றன. சீனாவில் அது போன்ற சூழல் இல்லை என அவர் குறிப்பிட்டார்.




மாகாண சபைத் தேர்தல்கள் குறித்த தில்வின் சில்வாவின் நிலைப்பாடு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இந்தியாவில் தங்கியிருந்தபோது தமிழ் தேசியப் பிரச்சினை குறித்து எழுந்த கேள்விகளுக்கு, தாம் அரசாங்கத்தின் பிரதிநிதியாக அல்லாது ஜே.வி.பி. பொதுச் செயலாளராகவே கலந்து கொண்டதாக அவர் வலியுறுத்தினார். அதேவேளை, மாகாண சபை முறை தோல்வியுற்ற மாதிரி என அவர் முன்பே குறிப்பிட்டிருந்தார்.

இதனால் ஒரு கேள்வி எழுகிறது அதாவது அவரது கருத்துகள் கட்சியின் நிலை ப்பாட்டைக் காட்டுகிறதா? அல்லது அரசாங்கத்தின் எதிர்காலக் கொள் கையை முன்கூட்டியே சுட்டிக் காட்டுகிறதா?

இது இந்தியா அழுத்தம் கொடுக்கிறதா என்ற கேள்வி அல்ல. இந்தியா அழுத்தம் இல்லாத போதும் இலங்கை மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமா என்பதே உண்மையான சோதனை. தாம் பொறுப்பான அரசாங்கம் என செயல்பட வேண்டுமெனில் தேர்தல்களை நடத்தி, அனைத்து மாகாணங்களிலும் சமநிலை அபிவிருத்தியை உறுதி செய்ய வேண்டும் என தில்வின் கருதுகிறார்.

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்து இந்தியாவின் நிலைப்பாடு நீண்டகாலமாகத் தெளிவாகவே உள்ளது. 2021ஆம் ஆண்டு டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கூறியதாவது:

ஐக்கிய இலங்கையின் அடிப்படையில் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியத்திற்கான எதிர் பார்ப்புகள் நிறைவேறுவது இலங்கையின் சொந்த நலனுக்கே ஏற்றது. அதில் 13ஆவது திருத்தம் உள்ளிட்ட பொருத்தமான அதிகாரப் பகிர்வும் அடங்கும்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு 'தமிழ் கோரிக்கைகளுக்கான பிரதிநிதித்துவம்' அல்ல. மாறாக தென் இந்தியாவில் 8.5 கோடிக்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்களைக் கொண்ட அண்டை நாட்டின் பொறுப்புணர்வாகும். இலங்கையில் தமிழ் உரிமைகள் உறுதி செய்யப்படுவது, இந்தியாவுக்காக அல்ல இலங்கைக்கே நன்மை தரும் என்பதே இந்தியாவின் வாதம்.

இலங்கையில் தமிழ் அரசியல் கட்சிகள் பலமுறை இந்தியாவை நாடியுள்ளன. கொழும்பு தனது பொறுப்புகளை புறக்கணிக்கும் போது, அவர்கள் புது டெல்லியை நாடுவது அரசியல் நிதர்சனம். கடந்த ஆண்டு பிரதமர் மோடி கொழும்பு வந்தபோதும், மாகாண சபைத் தேர்தல்களை உறுதி செய்ய இந்தியா தலையிட வேண்டும் என தமிழ் கட்சிகள் மீண்டும் கோரிக்கை வைத்தன.

அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் அவர்கள், தமிழ் தேசியப் பிரச்சினையில் இந்தியாவின் ஈடுபாட்டை தங்கள் அரசியல் கண்ணோட்டத்துக்கு ஏற்ப விளக்கிக் கொள்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், கொழும்பின் செயலின்மையே தமிழ் கட்சிகளை இந்தியாவை நாட வைக்கிறது.

இந்தப் பின்னணியில், ஜே.வி.பி.—என்.பி.பி. கூட்டணி மாகாண சபை முறையையே ஒழிக்க முயலுமோ என்ற சந்தேகங்களும் எழுகின்றன. கடந்த காலத்தில் ஜே.வி.பி 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபை முறையையும் கடுமையாக எதிர்த்ததுடன், அந்த ஆதரவாளர்கள் மீதான வன்முறைகளும் நடந்துள்ளன என்பது வரலாறு.

தமிழ் தலைவர்கள் சமீபத்தில் கொழும்பில் டாக்டர் ஜெய்சங்கரைச் சந்தித்து தேர்தல்களை வலியுறுத்தினர். அவர்களின் கோரிக்கைகள் இந்தியாவை மட்டுமல்ல, இந்தியா பயணிக்கவிருந்த தில்வின் சில்வாவையும் நோக்கியவையாக இருந்தன.

அரசியல் ஆட்சிப் பயணத்தில் ஜே.வி.பி. மூன்றாவது கட்டத்தை எட்டியுள்ளது என கட்சி கூறுகிறது. ஜே.வி.பி.1 மற்றும் ஜே.வி.பி.2 கட்டங்கள் குறித்து விரிவான ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, ஜே.வி.பி.2 கட்டம் மார்க்சிய சொற்பொழிவுகள், சிங்கள தேசியவாதம் மற்றும் இந்திய விரோத உணர்வுகளால் அமையப்பட்டதாகப் பார்க்கப் படுகிறது.

இந்த மனப்பான்மை மாற வேண்டும் என்பதை இந்திய உயர் ஆணைய அதிகாரிகளிடம் விளக்கினேன். எங்கள் அரசியல் கல்வியில் இன்னும் 'ஐந்து வகுப்புகள்' உள்ளன. ஆனால் இந்தியா குறித்து தனிப்பட்ட வகுப்பு இல்லை, என தில்வின் கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் இந்திய–இலங்கை ஒப்பந்தத்தையும் எதிர்த்த ஜே.வி.பி., இந்திய வம்சாவளி தமிழர்களை இந்திய விரிவாக்கத்தின் கருவி என விமர்சித்தது. இன்று இந்தியாவும் தாமும் மாறியுள்ளோம் எனக் கூறும் நிலையில், இந்திய கூட்டாட்சி முறைமையை முன்மாதிரியாகக் கொண்ட மாகாண சபை முறையை ஏன் இன்னும் எதிர்க்க வேண்டும்?

இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு பல பாடங்களை வழங்குகிறது. 1930களில் ஈ.வி. இராமசாமி (பெரியார்) தலைமையில் தமிழ்நாடு பிரிவினையை கோரியது வரலாறு. அவரது சீடர் சி.நா. அண்ணாதுரை அதை அரசியல் தளத்துக்கு கொண்டு வந்தார். ஆனால் 1967இல், சீன–இந்தியப் போருக்குப் பின்னரும் 16ஆவது திருத்தச் சட்டத்திற்குப் பின்னரும், தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டது.

இன்று தமிழ்நாடு, இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக திகழ்கிறது. பல வடமாநிலங்களை விட முன்னிலையில் உள்ளது. 'தமிழ்நாடு மாதிரி' என அழைக்கப்படும் இந்த வளர்ச்சி, பிரிவினையால் அல்ல, வலுவான மாநில ஆட்சியால் கிடைத்தது.

ஒருகாலத்தில் வடக்கு வளர்கிறது தெற்கு வாடுகிறது என கூறப்பட்ட கோஷம் இன்று பொருந்தாததாக மாறியுள்ளது. தமிழ்நாடு செழித்து வளர்ந்திருப்பது, அதிகாரப் பகிர்வு தேசிய ஒற்றுமையையும் பிராந்திய முன்னேற்றத்தையும் இணைக்க முடியும் என்பதற்கான சான்றாகும்.

இலங்கையின் மேற்குத் மாகாணத்தைத் தாண்டிய பிற மாகாணங்களும் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு சமமாக பங்களிக்கக்கூடிய அரசியல் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வை தமிழ் பிரச்சினையாக மட்டும் அல்லாது, தேசிய அபிவிருத்தித் திட்டமாகக் காண வேண்டிய நேரம் இது.


இந்திய முறை இன அல்லது மத அடிப்படையில் அல்ல் உள்ளடக்கிய வளர்ச்சியின் அடிப்படையில் அமைகிறது. பல மொழிகளும் பல இனங்களும் கொண்ட இலங்கை போன்ற ஜனநாயகத்திற்கு அதிகாரப் பகிர்வே நிலையான தீர்வாக அமையும்.

அதற்கு மாறாக, சீனாவைப் போன்ற முழுமையான மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறை முற்றிலும் வேறுபட்ட பாதையை முன்வைக்கிறது.

இந்தியப் பயணத்திலிருந்து ஜே.வி.பி. கற்றுக்கொள்ள வேண்டிய உண்மையான பாடம் இதுவே.

# கழண்ட கத்திகள்?

சில ஆண்டுகளுக்கு முன் இந்திய வெளியுறவுச் செயலர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட 10 பேரை அவர் சந்தித்தார். சந்திப்பு முடிந்து வெளியே வரும் போது சிவாஜிலிங்கம் அங்கிருந்த ஓர் அரசியல் விமர்சகரிடம் கேட்டார்...இந்த வாரக் கட்டுரை இதைப் பற்றித் தானா? என்று.



அப்பொழுது அரசியல் விமர்சகர் சொன்னார், இல்லை இந்தச் சந்திப்பில் நான் ரிப்போர்ட்டராகக் கலந்து கொள்ளவில்லை. இது மூடிய அறைக்குள் நடந்த ஒரு சந்திப்பு. தமிழ்த் தரப்பு இவ்வாறு மூடிய அறைகளுக்குள் நடக்கும் சந்திப்புகளில் பேசப்பட்ட விடயங்களை அப்பாவித்தனமாக அல்லது உள்நோக்கத்தோடு வெளியே விடுகிறது என்று ஓர் அபிப்பிராயம் ராஜதந்திர வட்டாரங்கள் மத்தியில் உண்டு என்று.

இதை இங்கே ஏன் எழுத வேண்டி இருக்கிறது என்றால் கடந்த வாரம் நடந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகத்தான். முதலாவது விடயம், கடந்த திங்கட்கிழமை நடந்த பிரித்தானிய அரசாங்கத்தின் துணைப் பிரதமருக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு. இரண்டாவது விடயம், சுவிஸ் தூதரகத்தால் கடந்த 19ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்ட அதே தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான ஒரு சந்திப்பு பற்றிய விடயம்.

பிரித்தானிய துணைப் பிரதமர் தமிழ்க் கட்சிகளைச் சந்தித்த போது அதில் கஜேந்திரகுமார் தெரிவித்ததாகக் கூறப்படும் ஒரு கருத்துத் தொடர்பாக ஒரு தகவல் ஊடகம் ஒன்றில் வெளிவந்தது. ஆனால் கஜேந்திரகுமார் தான் அவ்வாறு கூறவில்லை என்று மறுத்திருந்தார். இதில் கஜேந்திரகுமார் அவ்வாறு கூறினாரா இல்லையா என்ற விவாதத்தை தனியாக வைத்துக் கொள்ளலாம். இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், மூடிய அறைக்குள் நடந்த ஒரு சந்திப்பு தொடர்பாக செய்திகளைக் கசியவ ிடுவது பற்றியது. அதைவிட முக்கியமாக, கட்சிகளுக்கு இடையிலான முரண்பாட்டுக்குள் தூதரகங்களை இழுத்து விடுவது.

இப்படித் தான் சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அனுசரணையோடு கடந்த 19ஆம் திகதி நடக்கவிருந்த சந்திப்புத் தொடர்பாகவும் தகவல்கள் முன்கூட்டியே ஊடகங்களுக்குக் கசிந்தன. அது தொடர்பாக சுவிட்சர்லாந்து தூதரகம் சந்தோசமாக இல்லை என்றும் தெரிகிறது. இங்கேயும் ராஜதந்திர சமூகத்துடனான இடையூடாட்டங்கள் ஊடகங்களுக்குக் கசிய விடப்பட்டிருக்கின்றன.

இது வேண்டுமென்று செய்யப்பட்ட ஒன்றா என்ற சந்தேகங்களும் உண்டு. எதுவானாலும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் தூதரங்கள் தொடர்பான செய்திகள் கசிய விடப்படுகின்றன என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது

இந்த இரண்டு சம்பவங்களும் தமிழ்க் கட்சித் தலைவர்களில் ஒரு பகுதியினர் ஓர் அரசு போலவும் சிந்திக்கவில்லை ஒரு தேசமாகவும் சிந்திக்கவில்லை ஆகக் குறைந்தது ராஜீய உறவுகளில் பேணப்பட வேண்டிய நிதானத்தோடாவது சிந்திக்கவில்லை என்பதைத் தான் காட்டுகின்றன.

மேலும் ஒரு சம்பவம். இது. வட மாகாண சபை இயங்கிக் கொண்டிருந்த பொழுது நடந்தது.அதில் வயதால் மூத்த தலைவர் ஒருவர் கனேடியத் தூதரகத்துடனான சந்திப்பு ஒன்றின் போது கூறப்பட்ட சில விடயங்களை சந்திப்பு முடிந்த கையோடு ஊடகங்களுக்கு அப்பாவித்தனமாக வெளிப்படையாகக் கூறிவிட்டார். அதுவும் அப்பொழுது தூதரக வட்டாரங்களில் அதிருப்தியோடு பார்க்கப்பட்டது.

தமிழ்க் கட்சித் தலைவர்களில் ஒரு பகுதியினர் ராஜதந்திர சமூகத்தைச் சந்திக்கும் போது ஓர் அரசைப் போல சிந்தித்து, ஓர் அரசைப் போல பக்குவமாக நடந்து கொள்வதில்லை என்பது தான் கடந்த 16 ஆண்டு கால அனுபவம் ஆகும். ஓர் அரசைப் போல சிந்திக்கா விட்டாலும் பரவாயில்லை, குறைந்தபட்சம் ஒரு தேசமாகக் கூட அவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை என்பதைத்தான் அண்மைக்கால நடப்புகள் நமக்குக் காட்டுகின்றன.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீசர் தமிழ் மக்களிடமிருந்த ஒரு ராஜ்ஜியத்தை தோற்கடித்தார்கள். அங்கிருந்து தொடங்கி தமிழ் மக்கள் ஐந்து நூற்றாண்டுகளாக அரசற்ற தரப்பாகவே இருந்து வருகிறார்கள். இடையில் ஆயுதப் போராட்டம் 1985 வசந்த காலத்தில் தொடங்கி 2009 மே மாதம் வரையிலும் ஒரு கருநிலை அரசைக் கட்டி எழுப்பியது.

அந்த கருநிலை அரசின் ஒரே இராஜதந்திரியாக அன்ரன் பாலசிங்கம் உலகம் முழுவதும் பிரகாசித்தார். அவர் துறைசார் இராஜதந்திரி அல்ல. முறைசாரா ராஜதந்திரி தான். ஆனாலும் ஈழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் பாலசிங்கம் உலகம் முழுவதும் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் ராஜதந்திர முகமாக மதிக்கப்பட்டார். லண்டனில் அவருடைய இறுதி நிகழ்வானது, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அதிகம் கலந்து கொண்ட ஒரு தமிழ் நிகழ்வாகக் காணப்பட்டது.

சுமார் நான்கு நூற்றாண்டுகளில் அதிக காலம் அரசு இல்லாத சமூகமாக இருந்த காரணத்தாலோ என்னவோ, தமிழ் மக்கள் மத்தியில் ஓர் அரசைப் போல சிந்திக்கும் மாண்பு அனேகமாக இல்லாமல் போய்விட்டது. ஒரு தேசமாகச் சிந்திக்க முடியாத மக்கள் ஓர் அரசைப்போல சிந்திப்பார்கள், செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது கடினமானது தான். ஆனால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டுமாக இருந்தால் அது தொடர்பில் வெளி உலகத்தை அணுகும் போது ஓர் அரசைப் போல சிந்தித்து செயல்படாவிட்டால் என்ன நடக்கும்? கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்குள் தூதரகங்கள் இழுத்து விடப்படும். நிறுவன மயப்படாத தனியோட்டங்களே அதிகரிக்கும்

இந்த இடத்தில் மேலும் ஓர் உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டலாம். சில ஆண்டுகளுக்கு முன் தென்னிலங்கையில் இடம் பெற்ற மக்கள் எழுச்சிகளினால் ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்து துரத்தப்பட்டார்கள்.அதன் பின்னணியில் ஒரு புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றத்துக்கு ஊடாகத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக கட்சித் தலைவர்களுக்கு இடையில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் சில கட்சித் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் நிலைப்பாட்டோடு காணப்பட்டார்கள். இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதனை அங்கிருந்த கட்சித் தலைவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தோடு தொலைபேசியில் தொடர்பு எடுத்திருக்கிறார். தூதரகத்தின் இரண்டாம் நிலை அதிகாரியோடு நடந்த அந்த உரையாடலை அவர் எல்லாரும் கேட்கக் கூடியதாக கைபேசியின் ஒலி பெருக்கியில் விட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, அந்தத் தகவல் பின்னர் ஊடகங்களுக்கும் கசிய விடப்பட்டது. ஒரு வெளிநாட்டுத் தூதரகத்துக்கு அப்படி ஒரு அனுபவம் அதற்கு முன் ஏற்பட்டிருக்குமோ தெரியாது.

ஆனால் அப்படிப்பட்ட அனுபவங்களின் பின் ராஜதந்திரிகள் தமிழ்க் கட்சித் தலைவர்களை நம்பிக் கதைப்பார்களா? மூடிய அறைக்குள் நடக்கும் சந்திப்புகளில் கூறப்பட்ட விடயங்களை சரியாகவோ, பிழையாகவோ அல்லது கட்சி முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் விதத்திலோ வெளியே கசியவிடும் அரசியல்வாதிகளை எந்தத் தூதரகமாவது நம்பிக் கதைக்குமா? நமது தமிழ் தலைவர்களில் எத்தனை பேர் அவ்வாறு நம்பி கதைக்கத்தக்க தலைவர்களாகக் காணப்படுகிறார்கள்?

எனது நண்பர் ஒருவர் தென்மராட்சியைச் சேர்ந்தவர்.அவர் ''கழண்ட கத்திகள்'' என்ற ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துவார். அதன் பொருள் கத்தியின் பிடி கழண்டு விட்டது, அல்லது பிடி கத்தியோடு இறுக்கமாக இல்லை என்பதாகும். அவ்வாறு கழண்ட கத்தியால் எதையாவது வெட்டினால், அது ஒழுங்காக வெட்டாது மட்டுமல்ல, வெட்டுகிறவரின் கையையும் நன்னி விடும்˙ காயப்படுத்தி விடும்.



இப்பொழுதுள்ள தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் அவ்வாறு கழண்ட கத்திகள் தானா? ராஜதந்திர சமூகம் அவர்களை நம்பி உறவாடி, ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளுமா? இந்தக் கழண்ட கத்திகளை வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் எதைப் பெறப் போகிறார்கள்?

– நிலாந்தன் –

# தி.மு.க. கூட்டணியின் விரிவாக்கமும் தமிழக அரசியலின் புதிய சமன்பாடும்!



– ராஜன் –

தமிழக அரசியல் எப்போதும் உறுதியான கொள்கை நிலைப்பாடுகளாலும் அதே சமயம் திடீர் கூட்டணி மாற்றங்களாலும் நகர்ந்து கொண்டிருக்கிறது. அண்மைக் கால அரசியல் நகர்வுகளில் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுவது, திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணியில் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் இணைந்திருப்பதோடு, முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் அரசியல் நிலைப்பாடுகளும் ஆகும். இந்த இரண்டு நகர்வுகளும் தனித்தனியான நிகழ்வுகள் அல்ல. அவை தமிழகத்தின் அடுத்தடுத்த தேர்தல் அரசியலை முன்கூட்டியே வடிவமைக்கும் முயற்சிகளாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

நடிகர் விஜயகாந்த் அவர்கள் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், ஒரு காலத்தில் திமுகவுக்கும் அதிமுகவுக்கும் மாற்று சக்தியாக தன்னை நிலை நிறுத்த முயன்றது. குறிப்பாக 2011 சட்டமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சித் தரப்பில் கணிசமான இடத்தைப் பெற்றது. ஆனால் காலப் போக்கில் கட்சியின் அரசியல் தாக்கம் குறைந்தது. தலைமை மாற்றங்கள், அமைப்பு பலவீனம், வாக்கு வங்கி சிதறல் ஆகியவை அதற்கு காரணங்களாகக் கூறப்பட்டன.

இந்நிலையில், திமுக கூட்டணியில் இணையும் முடிவு, ஒரு உயிர்ப்புப் போராட்டமாகவும், அரசியல் நிலைப்பாட்டை மறுசீரமைக்கும் முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது. இதை விமர்சகர்கள் அரசியல் அவசியம் எனவும், ஆதரவாளர்கள் தந்திரமான முன்னேற்றம் எனவும் விவரிக்கின்றனர்.

கருணாநிதிக்கும் மறைந்த தே.மு.தி.க தலைவர் விஜயகாந்துக்கும் இடையிலான நட்பு குறித்து பிரேமலதா விவரித்தார். 'இருவரும் பல ஆண்டுகளாக நட்பில் இருந்தனர். எங்கள் திருமணத்தைக் கருணாநிதி தான் நடத்தி வைத்தார்' எனக் கூறினார்.

2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது தே.மு.தி.க உடன் கூட்டணி வைப்பதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி பெரிதும் ஆர்வம் காட்டினார். இது குறித்து அவர் செய்தியாளர் சந்திப்பில் பேசும் போது, 'பழம் நழுவி பாலில் விழப் போகிறது' எனப் பேசினார். இதனைக் குறிப்பிட்டுப் பேசிய பிரேமலதா, 'எத்தனையோ முறை பேசப்பட்டாலும் கூட்டணி என வரும்போது நிறைவேறாமல் இருந்தது. பத்து ஆண்டுகள் கழித்து தேன் கலந்த பாலில் இது விழுந்துள்ளது' என்கிறார்.

அ.தி.மு.க கூட்டணியை தவிர்த்தது குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, 'இந்த முறை ஒட்டுமொத்த கட்சியின் விருப்பமாக தி.மு.க கூட்டணி இருந்தது' எனத் தெரிவித்தார்.



திமுகவின் பார்வையில், இந்த இணைப்பு வெறும் கூட்டணி விரிவாக்கம் அல்ல. அது எதிரணியின் வாக்குகளைப் பிளக்காமல் தன்னகத்தே ஒருங்கிணைக்கும் கணக்கீடு. குறிப்பாக அதிமுக பல்வேறு உள்கிளை பிரச்சினைகளால் பலவீனமடைந்துள்ள சூழலில், எதிரணியில் இருந்த வாக்கு வங்கிகளை தன் அணியில் கொண்டு வருவது அரசியல் ரீதியாக பலனளிக்கக்கூடியது. இதன் மூலம் திமுக நிலைத்தன்மை மற்றும் விரிவான ஆதரவு என்ற இரு அரசியல் செய்திகளை மக்களிடம் ஒரே நேரத்தில் பரப்ப முயல்கிறது.

இந்நிலையில் ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் அரசியல் நகர்வுகள் தனித்த கவனத்துக்குரியவை. அதிமுகவில் நீண்ட காலம் முக்கிய முகமாக இருந்த அவர், கடந்த சில ஆண்டுகளில் கட்சியின் உள்நிலை மாற்றங்களால் தனித்த அரசியல் பாதையைத் தேட வேண்டிய நிலைக்கு வந்தார். அவரது கருத்துரைகள், திமுக அரசை நோக்கி வெளிப்படும் மிதமான அணுகுமுறை, சில சமயங்களில் நேரடி எதிர்ப்பைத் தவிர்க்கும் பாணி ஆகியவை அரசியல் வட்டாரங்களில் பலவிதமான கணிப்புகளுக்கு வழிவகுக்கின்றன. அவர் நேரடியாக திமுக கூட்டணியில் இணையாதிருந்தாலும், அவரின் நிலைமையே அதிமுக வாக்கு வங்கியில் பிளவை ஏற்படுத்தும் ஒரு காரணி என்ற பார்வையும் நிலவுகிறது.

இன்றைய தமிழக அரசியல் நிலவரத்தை விரிவாகப் பார்க்கும் போது மூன்று முக்கிய அம்சங்கள் தென்படுகின்றன. ஒன்று ஆட்சியில் உள்ள திமுக நிர்வாக ரீதியான திட்டங்களை முன்னிறுத்தி நிலைத்தன்மைச் செய்தியை வலுப்படுத்துகிறது. இரண்டு அதிமுக இன்னும் முழுமையான ஒருமைப்பாட்டை அடையவில்லை அதன் அரசியல் குரல் தெளிவடைய வேண்டியுள்ளது. மூன்று பாஜக உள்ளிட்ட தேசியக் கட்சிகள் தமிழகத்தில் தங்களது இருப்பை உறுதி செய்ய முயல்கின்றன் ஆனால் பாரம்பரிய திராவிட அரசியல் வட்டத்தில் அவர்களின் செல்வாக்கு இன்னும் பரவலாக மாறவில்லை.

இதேவேளை, காங்கிரஸ் கட்சிக்கு என்ன பாதிப்பு என்று பார்த்தால் தற்போது கூட்டணியில் தே.மு.தி.க வருவதன் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் இடங்களை தி.மு.க குறைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன' எனக் கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் மாலன். தே.மு.தி.கவை ஒரு காரணமாக தி.மு.க முன்வைக்கக் கூடும். அந்தவகையில், காங்கிரஸ் கட்சிக்கான முக்கியத்துவம் குறையலாம்' என அவர் தெரிவித்தார்.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் 25 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது. 'இந்த முறை 25 தொகுதிகளுக்கும் மேல் தி.மு.க கொடுப்பதற்கும் வாய்ப்பில்லை' என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

சுமார் 170 தொகுதிகளுக்கும் மேல் போட்டியிடுவது என தி.மு.க முடிவெடுத்தால் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கப்படும் தொகுதிகளில் மாற்றம் வரலாம்' எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சூழலில் திமுக– தேமுதிக இணைப்பு மற்றும் ஓபிஎஸ் அரசியல் நிலைமைகள் இணைந்து ஒரு பெரிய அரசியல் சமன்பாட்டை உருவாக்குகின்றன. இது வெறும் யார் யாருடன் என்ற கேள்வி அல்ல. யார் எந்த வாக்கு வட்டாரத்தை தக்க வைத்துக் கொள்கிறார்கள் என்ற கணிதம். தமிழக வாக்காளர்கள் பொதுவாக நிர்வாகத் திறன், சமூக நலத்திட்டங்கள், மற்றும் அரசியல் நிலைத்தன்மை ஆகியவற்றை மதிப்பிடும் பண்பைக் கொண்டுள்ளனர். எனவே கூட்டணி மாற்றங்கள் மட்டும் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்காது ஆனால் அவை மனநிலையை மாற்றும் முன்னோட்டங்களை உருவாக்கும்.

முடிவாகக் கூறப் போனால், தமிழக அரசியல் வெளிப்படையாக அமைதியாகத் தோன்றினாலும், அடிநிலையிலோ மறு சீரமைப்பின் ஓசைகள் கேட்கின்றன. திமுக தனது ஆதிக்கத்தை விரிவாக்க முயல்கிறது. எதிரணிகள் தங்கள் அடையாளத்தை மீட்டெடுக்கப் போராடுகின்றன. தேமுதிக இணைப்பு மற்றும் ஓபிஎஸ் நிலைப்பாடு ஆகியவை இந்தப் பெரிய அரசியல் மாற்றத்தின் பகுதிகள் மட்டுமே. அடுத்த தேர்தல் காலப்பகுதியில் இந்த நகர்வுகள் எவ்வாறு வடிவெடுக்கின்றன என்பதே தமிழக அரசியலின் அடுத்த அத்தியாயத்தை நிர்ணயிக்கும்.

# இந்தியா தொடர்பான ஜே.வி.பி.யின் நிலைப்பாடு பற்றிய பழைய கருத்துக்களை மாற்ற வேண்டிய நேரம் இது!

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) இந்தியாவுக்கு எதிரானது என்று நீண்ட காலமாக நிலவும் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். காலப் போக்கில் ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அதன் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறி யிருக்கிறார்

அண்மையில் இந்தியாவுக்கு மேற் கொண்ட தனது முதன் முதலான விஜயத்தை தொடர்ந்து 'தி இந்து' வுடன் பேசிய சில்வா புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன் மிகவும் நட்பிணக்க மான பேச்சுவார்த்தைகளை நடத்திய தாகவும் இந்தியா இலங்கையின் நட்பு நாடாகவும் நம்பிக்கைக்குரிய பங்காளி யாகவும் தொடர்ந்து இருக்கும் என்று அவர் தன்னிடம் கூறியதாகவும் தெரி வித்தார்.

சினேகபூர்வமான உறவுகளைப் பேணு வதற்கான எமது விருப்பத்தை நாமும் அவரிடம் தெரிவித்தோம். டித்வா சூறாவளியின் பாதிப்புக்களில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியா செய்துவரும் பங்களிப்புக்கும் உதவி களுக்கும் நன்றியைக் கூறினோம்' என்று சில்வா குறிப்பிட்டார்.

முதலில் டில்லி சென்ற சில்வா அங்கி ருந்து குஜராத் மற்றும் கேரளா மாநிலங்களுக்கு சென்றார். அந்த இரு மாநிலங்களினதும் முதலமைச்சர்களை அவர் சந்தித்தார்.

குஜராத்தில் உட்கட்டமைப்பு அபி விருத்தி முனைப்பானதாக இருக்கின்ற அதேவேளை, கேரளாவில் மாநிலத்தின் வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கு பயன் படுத்தப்படுகிறது என்று சில்வா கூறி னார். கேரளாவின் அபிவிருத்தித் தராதரங்கள் இலங்கையினதை ஒத்தி ருக்கிறது. மாநிலத்தின் நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களைச் சென்றடை கின்றன.'

இலங்கையில் இந்தியத் திட்டங்கள் குறிப்பாக, கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த கிழக்கில் திருகோணமலை, யாழ்பாணத்தில் காங்கேசன்துறை. துறைமுகங்களின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஜே.வி.பி. தொடர்ந்தும் சந்தேகம் கொண்டதாக இருக்கிறது என்ற எண்ணம் பற்றி கேட்டபோது பெரிய திட்டங்கள் தொடர்பிலான கரிசனையைப் பொறு த்த வரை அது இந்தியாவின் திட்ட ங்கள் தொடர்பிலானதாக மாத்திரம் இல்லை என்று கூறினார்.

எந்த நாடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதை பொருட்படுத்தாமல், ஒவ் வொரு திட்டத்தையும் எவ்வாறு பயனுறுதியுடைய முறையில் நடை முறைப்படுத்த முடியும் என்று நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. திட்டத் துக்கான செலவு மற்றும் நிபந்தனை கள் நியாயமானவையா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அத்தகைய திட்டங்கள் இலங்கை மக்களினதும் இரு நாடுகளினதும் சிறந்த நலன்களு க்கு ஏற்ற முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதை நாம் உறுதிசெய்ய வேண்டியிருக்கிறது.'

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு நன்கொடை யாக 61. 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை தருவதாக இந்தியா உறுதியளித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்திய விஸ்தரிப்புவாத கோட்பாடு பற்றி ஒரு காலத்தில் அதன் உறுப்பினர்களுக்கு மார்க்சிய வகுப்புக்களில் போதனை செய்த ஜே.வி.பி. யின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து சுட்டிக்காட்டிய பொதுச் செயலாளர் ஜே.வி.பி. இந்தியா வுக்கு விரோதமான ஒரு கட்சி என்ற பழைய எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் இது என்று கூறி னார்.

1987 இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கை, அதன் விளைவாக கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறை மற்றும் இந்திய அமைதி காக்கும் படையின் வருகை உட்பட இலங்கையில் இந்தியாவின் தலையீட்டு க்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த வரலாற்றைக் கொண்ட ஜே.வி.பி. தற்போது சமகால அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் மீது கவனத்தைக் குவித்திருக்கிறது என் றும் அவர் கூறினார்.

அதேவேளை, இந்தியாவும் கூட இலங்கைத் தரப்புடன் பாரம்பரியமாக கிளப்பி வந்த (நீண்டகாலமாக தாமதி க்கப்பட்டு வரும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது, தேசிய இனப்பிரச்சினை அல்லது தமிழ்பேசும் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கம் செய்வது போன்ற) பிரச்சினைகளை சில்வாவுடனான சந்திப்புகளில் (ஜெய்சங்கருடனான சந்திப்பு உட்பட ) கிளப்பவில்லை. அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கு வது குறித்தே கவனம் செலுக்கப் பட்டது ' என்று சில்வா குறிப்பிட் டார்.

மார்க்சிய – லெனினிச வேர்களைக் கொண்ட ஜே.வி.பி. இன்னமும் கூட சோசலிசத்தில் நம்பிக்கை கொண்டிரு ப்பதாக கூறுகிறது. அதன் இளம் உறுப்பினர்களுக்கான பாடவிதானங் களில் சோசலிசத்துக்கான பாதை போல்ஷெவிக் கட்சியொன்றை கட்டி யெழுப்புதல் உட்பட்ட விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. ஜே.வி.பி. அதன் அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிட்டுவிட்டதாக ஏனைய இடது சாரிகள் விமர்சனம் செய்கிறார்கள்.

ஆனால், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான, தேசிய மக்கள் சக்தியினால் காணப்பட்டிரு



க்கும் முன்னேற்றம் குறித்து கட்சி மகிழ்ச்சியடைகிறது என்று சில்வா கூறுகிறார்.

நாம் அதிகாரத்துக்கு வந்த போது நிர்மூலம் செய்யப்பட்டு வக்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட பொருளாதார த்தை காப்பாற்ற வேண்டியதே மிகப் பெரிய சவாலாக இருந்தது. நாம் எதிர்பார்த்ததை விடவும் விரைவாக பொருளாதாரத்தை உறுதிப்பாட்டுக்கு கொண்டுவரக்கூடியதாக இருந்தது. நாட்டின் வருவாய் அதிகரித்திருக் கிறது. நிதி விவகாரங்களில் ஒழுங்கு கட்டுப்பாடு பேணப்படுகிறது. ஊழலும் இலஞ்சமும் ஒழிக்கப்பட்டு விட்டன.


அதேவேளை, கிராமிய வறுமையை ஒழித்தல், தேசிய ஐக்கியத்தைக் கட்டி யெழுப்புதல் தொடர்பில் பெருமளவு பணிகளைச் செய்ய வேண்டியிருக் கிறது. பொருளாதாரப் பயன்கள் நேர்மையான முறையில் பகிர்ந்தளிக்கப் படுவதை உறுதி செய்வது என்பது தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு அளித்த இன்னொரு முக்கியமான வாக்குறுதியாகும் என்று சில்வா சொன் னார். சிக்கனத் திட்டங்களின் விளை வாக சாதாரண மக்கள் மீது கடுமையான சுமையை ஏற்றியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் தற் போதைய உதவித் திட்டத்தின் எல்லைகளுக்குள் எவ்வாறு அரசாங்கம் மேற்கூறியவற்றைச் சாதிக்கலாம் என்று கேட்டபோது, 'சர்வதேச நாணய உதவித் திட்டத்துடன் சேர்ந்து சில சவால்களும் வந்திருக்கின்றன ' என்று அவர் பதிலளித்தார்.

எவ்வாறெனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி சில தீர்வுகளை அரசாங்கத் தினால் காணக்கூடியதாக இருந்தது என்று கூறிய சில்வா, ' மக்களின் நல் வாழ்வுக்கான திட்டங்களுக்கு சர்வதேச நாணயநிதியம் இடையூறு செய்ய வில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பதிலும் அரச நிறுவனங்களுக்கு உடனடியாக நிதியை வழங்குவதிலும் சவால்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. நிகர உள்நாட்டு உற்பத்தி அதிகிரிக் கும் போது மாத்திரமே நலன்புரித் திட்டங்களுக்கான 6 ஒதுக்கீடுகளை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். பொருளாதாரம் அபிவிருத்தியடையும் போது நிச்சயமாக ஒதுக்கீடுகளும் அதிகரிக்கும்' என்று கூறிப்பிட்டார்.


- மீரா ஸ்ரீநிவாசன் - (த.இந்து)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா கஷ்டங்களும் நீங்கி மனதில் நிம்மதி உண்டாகும். முயற்சிகள் சாதகமானபலன் பெறும். வாகனங்களில் செல்லும் போதும், இயந்திரங்களை கையாளும் போதும் தீ, மின்சாரம் ஆகியவற்றிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. வீட்டில் சுபகாரியங்கள் நடக்கலாம். திருமண முயற்சிகள் கைகூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். வியாபாரம், தொழிலில் ஏற்பட்ட தொய்வு நீங்கும்.





ரிஸபராசி அன்பர்களே! திருமணம் தொடர்பான முயற்சிகள் கைகூடும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி நீங்கும். இனிமையான பேச்சின் மூலம் எல்லாவற்றையும் நல்ல முறையில் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த பிரச்னைகள் தீர்ந்து நல்லநிலை உண்டாகும்.





மிதுனராசி அன்பர்களே! எதிலும் முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. வீண் விவாதங்களால் அடுத்தவர்களுடன் தகராறு உண்டாகலாம். எனவே கவனமாக பேசுவது நல்லது. முயற்சிகளில் தடை உண்டாகலாம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்னைகள் தீரும். முக்கிய நபர்களின் நட்பு உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை பெறுவீர்கள். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பணவரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும்.





சிம்மராசி அன்பர்களே! எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அவசர முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. விரும்பதகாத ஆசைகள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். குடும்பத்தினரால் நன்மை உண்டாகும். பொருள் சேர்க்கை உண்டாகும். தடைபட்ட பணம் கைக்கு வந்து சேரும். மரியாதையும், அந்தஸ்தும் உயரும். தந்தை மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். காரிய வெற்றி உண்டாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். தொழில் வியாபார போட்டிகள் நீங்கும்.




துலாம்ராசி அன்பர்களே! உங்கள் மனதை வாட்டி வந்த சிக்கல்கள் தீரும். வெளிநாட்டு பயணங்கள் செல்ல நேரிடலாம். பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. புதிய வீடு கட்டும் பணி அல்லது பழைய வீட்டை புதுப்பிக்கும் பணிகள் நடைபெறும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். வழக்குகளில் சாதகமான பலன் காணப்படும். நீண்ட நாட்களாக இருந்த நோய் நீங்கும். தொழில் வியாபார போட்டிகள் விலகும். மற்றவர்களால் ஏற்பட்ட பழிசொல் நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாகனம், வீடு மூலம் செலவுகள் அவ்வப்போது ஏற்படலாம். எதையும் செய்யும் முன் தயக்கம் உண்டாகலாம். குடும்பத்தில் திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். பிள்ளைகள் உடல் நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! மன துணிவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். புத்திரர்களுக்கு நன்மை உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்னை குறையும். புத்தி சாதூரியம் அதிகரிக்கும். காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். எதிலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். திடீர் செலவுகள் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! எல்லா தொல்லையும் நீங்கி நன்மை ஏற்படும்.ஆன்மீக பயணம் செல்ல நேரிடும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் தேவையற்ற வாக்குவாதம் உண்டாகலாம். வாகனங்களால் செலவும் ஏற்படும். உடல் ஆரோக்யம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த லாபம் குறையும்.




கும்பராசி அன்பர்களே! ஓயாத வேலையும் அலைச்சலும் இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் மனவருத்தம் ஏற்படும் விதத்தில் ஏதாவது சம்பவங்கள் நடக்கலாம். உறவினர் நண்பர்கள் உங்களை சரிவர புரிந்து கொள்ளாமல் உங்களை விட்டு பிரிந்து செல்லக்கூடும். திடீர் மனக்கவலை ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும்.




மீனராசி அன்பர்களே! பொருள் சேர்க்கையும் உடல் ஆரோக்கியமும் உண்டாகும். கடன் பிரச்சனைகள் தொல்லை தராமல் கட்டுக்குள் இருக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வாக்கு வன்மை அதிகரிக்கும். உடன் பிறப்புகளிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நீடிக்கும். மனதுக்கு பிடித்தபடி பொழுதை கழிப்பீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## திம்புக்கோட்பாடு:-தான் போக வழியில்லையாம்...

(16ம் பக்கத் தொடர்ச்சி) குறித்த சர்வஜன வாக்கெடுப்பு நடந்தால், அரசியல் அமைப்பில் முன் வைக்கப்படும் குறைந்த பட்ச தீர்வே மக்களால் அங்கீகரிக்கப்பட வாய்ப்புள்ளது. தமிழ் தரப்பு கோரும் தீர்வை முன் வைத்தால் அது தோல்வியடையும் என்ற நிலையே தென்னிலங்கையில் மாறிவரும் அரசியல் சூழல் வெளிப்படுத்துகிறது. 8000 பிக்குகள் வீதிக்கு இறங்குவது சரி, பிழைக்கு அப்பால் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. மாறாக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மட்டும் அல்ல தமிழ், முஸ்லீம் எம்.பி.க்களின் பெரும்பான்மையையும் ஜே.வி.பி. - என்.பி.பி. கொண்டுள்ளது. இதனால் தான் தமிழ் தரப்பு யார்? என்று கேட்கிறது ஜே.வி.பி. ஆக, வேட்டி பறிபோகப் போகிறது.

தமிழ்த்தேசிய அரசியலின் இன்றைய தேவை கொள்கை மாற்றம், அந்த கொள்கையை அடைவதற்கான புதிய அரசியல் அணுகுமுறை. இந்த மாற்றங்களும், அணுகுமுறையும் கஜந்திரகுமாரின் அல்லது சுமந்திரனின் கருத்து திணிப்புக்களாலும், அவர்களுக்கு பின்னால் சிவில் அமைப்புக்கள் என்ற பெயரில் ஆளுக்கொரு அமைப்பை பெயரளவில் வைத்திருப்பவர்களின் கருத்துக்களுக்கு அப்பால் மக்களின் சமகால கருத்தை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். ஆகக் குறைந்த பட்சம் இருக்கின்ற வடக்கு, கிழக்கு தனித்தனியான மாகாண சபை கட்டமைப்பை, அதிகாரங்கள் குறித்த விவாதங்களுக்கு அப்பால் காப்பாற்றிக் கொள்வதே தமிழ்த்தேசிய கற்பனாவாதிகளுக்கு இருக்கின்ற முதல் வழியும் ஒரே வழியுமாகும். தென்னிலங்கையில் மாகாணசபை சபை தேர்தலை நடாத்துமாறு எழுந்துள்ள சூழலை தமிழ்த்தேசியம் பயன்படுத்தி கொள்வது வேட்டியில் ஒரு துண்டையாவது காப்பாற்ற உதவும். இல்லையேல் நிர்வாணம் தான். தமிழ்த்தேசிய அரசியலின் இன்றைய தேவை விரலுக்கு ஏற்ற வீக்கம்! சொப்பிங் பையையே தூக்க வழியில்லாமல் இருக்கையில் முதுகுப்பையும்…., மாராப்பும் வெறும் அரசியல் ஏமாற்று..!

## நாட்களைக் கடத்தும் ஆளும் கட்சியும்

(17ம் பக்கத்தொடர்ச்சி) ஆக இந்தத் தரப்பு நானும் ரவுடிதான் என்று வலுக் கட்டாயமாக பொலிஸ் வண்டியில் அடம்பிடித்து ஏறும் நடிகர் வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சியையே நினைவுட்டுகின்றனர். இவர்களுடைய பேச்சுகளும் நடவடிக்கைகளும் நமக்குச் சிரிப்பூட்டுகின்றன. ஆனால், நாம் இதையெல்லாம் பார்த்து ரசிக்கும்படியாகவோ சிரிக்கும்படியாகவோ தானா வாழ்கிறோம். ஒரு பெரிய போரினால் முற்றாகவே சிதைக்கப்பட்ட சமூகத்தின் மக்களல்லவா!

அப்படியென்றால், இந்தக் குறைபாடுகளை நீக்கி, சிதைக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக அல்லது அவ்வாறு தம்மை அடையாளப்படுத்த முற்படும் தமிழ்த் தேசியவாத சக்திகள் இந்த இடத்தில் மிக விழிப்பாகவும் உறுதியாகவும் மிக நுட்பமாகவும் மிகத்தீவிரமாகவும் தொழிற்பட வேண்டும். ஆனால், அதை எந்தக் கட்சியும் செய்யவே இல்லை. தமிழ்த்தேசியவாத அரசியலை மென்நிலையிலும் தீவிர நிலையிலும் முன்னெடுக்கும் இரண்டு போக்குகள் உண்டு. ஒரு போக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறிதரன், சிவாஜிலிங்கம், ஐங்கரநேசன் போன்றோர் பிரதிநிதித்துப்படுத்தும் தீவிர நிலைப்போக்கு. மற்றது சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்பினர்.

இந்த இரண்டு தரப்பும் 2009க்குப் பிறகு, கடந்த 16 ஆண்டுகால அரசியலில் எதையும் சாதிக்கவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்த போதும் எதையும் செய்யவில்லை. அதிலிருந்து முரண்பட்டுப் பிளவுபட்டுப் பிரிந்து நின்றும் சாதிக்கவில்லை. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே குத்துவெட்டுப் பட்டுக் கொண்டிருக்கின்றன. ரெலோ, தமிழரசுக்கட்சி, முன்னணி போன்றவை பிளவுபட்டுள்ளன. உள்முரண்பாடுகளால் தமிழரசுக்கட்சியும் ரெலோவும் நீதிமன்றம் வரை சென்று விட்டன. சனங்கள் இப்பொழுது இந்தக் கட்சிகளின் உள் வீட்டுப் பிரச்சினையைக் கண்டு கொதிப்போராகவும் ரசிப்போராகவும் மாறியுள்ளனர். ஆனால், எல்லோருக்கு மேலும் துயரச் சுமைகளும் அபாயக் கத்திகளுமே அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன.

தெற்கில் பலமான எந்த அரசியற் சக்தியும் இல்லை. ரணில் — சஜித் அணிப் போட்டி முடிவுக்கு வரவில்லை. புதிதாக வேறெந்தக் கூட்டணியோ சக்தியோ உருவெடுக்கவும் இல்லை. இந்த நிலையில் அடுத்து என்ன நடக்கும்? அடுத்தாக என்ன செய்வது என்று யாருக்குமே தெரியவில்லை. ஆனால் NPP சத்தமில்லாமல் தன்னைப் பலப்படுத்துவதில் மிக நுட்பமாகச் செயற்படுகிறது. அரசியல் ரீதியாக சீனா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகள் என வல்லாதிக்கச் சக்திகளை அது திறமையாக தனக்கு வாய்ப்பாகக் கையாள்கிறது. புலம்பெயர் சமூகத்தை அநுரகுமார திசநாயக்க, ஹரிணி, ரில்வின் போன்றோர் தனிப்பட வசப்படுத்தி வைத்துள்ளனர். உள்ளூரில் அபிவிருத்திக் குழுக்கள் என்ற பேரில் கிராமியக் கட்டமைப்புகளை விரிவாக்கி, விரைவுபடுத்தித் தன்னைப் பலப்படுத்துகிறது. வெளியே உள்ள எதிர்த்தரப்புகளின் பலவீனத்தையும் NPP தனக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறது. மக்கள்? ஆம், மக்கள் எப்போதும் போல இருண்ட பாதையில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

## ஜே.வி.பியை மாற்ற முனைகிறதா இந்தியா?

(13ம் பக்கத் தொடர்ச்சி) இந்தியாவை எதிர்க்கவில்லை, அப்போதைய (காங்கிரஸ்) அரசாங்கத்தின் நடவடிக்கைகளையே எதிர்த்தோம் என்ற ரீதியாக அவர் பதிலளித்திருக்கிறார். தமது இந்திய எதிர்ப்புவாதத்தை அவர் கட்சி அரசியலாக சுருக்குவதற்கு முற்பட்டுள்ளார்.

அத்துடன், நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், இந்திய--இலங்கை உறவுகள் மாறிவிட்டன என்றும் விபரித்திருக்கிறார். அப்படியானால் இரண்டு தரப்புகளும் புரிந்துணர்வுக்கு வந்திருக்கின்றனவா? இணக்கப்பாட்டை எட்டியுள்ளனவா? அத்தகைய இணக்கம்- புரிந்துணர்வு ஏற்பட்டிருக்குமேயானால், சீனா இதனை எவ்வாறு எடுத்துக் கொள்ளப் போகிறது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

## எகியராஜயவும் இளங்கலைஞர் மன்றச்...

(15ம் பக்கத் தொடர்ச்சி) முடியாது என்பது தான் கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் ஆகும். போராடியதால்தான்,மூன்றாவது தரப்பின் தலையீடு காரணமாகத் தான் 13ஆவது திருத்தமாவது கிடைத்தது.அதையும் சிங்களபௌத்த அரசு கெட்டித்தனமாக ஒற்றையாட்சிக்குள் பெட்டி கட்டிவிட்டது. எனவே தமிழ் மக்கள் நொதிக்க வேண்டும். போராட வேண்டும். போராடவில்லை என்றால் தீர்வு இல்லை.

# அமெரிக்காவின் போர் விமானங்கள் இஸ்ரேலில் குவிப்பு!



அமெரிக்க விமானப் படையை சேர்ந்த 10க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் இஸ்ரேலில் குவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 20க்கும் மேற்பட்ட போர் விமானங் கள் மத்திய கிழக்கு பகுதிகளில் அதிகளவில் தென்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரான் நாட்டில் உள்நாட்டுக் குழப்ப நிலைகளும் போராட்டங்களும் வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்று வரும் நிலையில், ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க காத்திருப்பதாக சர்வதேச பரப்பில் பேசப்பட்டு வருகிறது. எப்போது வேண்டுமானாலும் இரு நாடுகளுக்கும் இடையே போர் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை உணர்த்தும்விதமாகவே அமெரிக்காவின் அடுத்தடுத்த நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்கா அதன் படைகளை மத்திய கிழக்கு பகுதிகளுக்கு இடம் மாற்றி வருகிறது. தாக்குதலுக்கு தயாராகி வருவதால் அமெரிக்கா தனது படையினரைப் பாதுகாக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதை இந்த செயற்பாடுகள் எடுத்துக் காட்டுவதாக கூறப்படுகிறது.

அதன்படி கட்டாரின் அல் உதீத் படைத்தளத்தில் இருந்த 100க்கும் மேற்பட்ட படைவீரர்களை இடம் மாற்றியுள்ளது என்பதை அமெரிக்காவின் பென்டகன் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் அமெரிக்காவின் இராணுவ தளங்கள் அமைந்துள்ள பஹ்ரைன், ஈராக், சிரியா, குவைத், சவுதி அரேபியா, ஜோர்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகளிலும் உள்ள இராணுவ அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளதோடு, அவர்களது ஆயுதங்களும் வேறிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வேளை ஈரானுடன் போர் ஏற்பட்டால் அமெரிக்க வீரர்கள் தாக்கப்படலாம் என்பதாலேயே வீரர்கள் இடம் மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், தனது வான் பாதுகாப்பு அமைப்புகளையும் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கையாக மத்திய கிழக்கு பகுதிகளுக்கு அமெரிக்கா இடம் மாற்றியுள்ளமை தெரிய வந்துள்ளது.

அமெரிக்கா தாக்கினால், தாமும் பதில் தாக்குதல் நடத்துவோம் என ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமெனி சமீபத்தில் தெரிவித்திருந்தார். அதனையடுத்து, தற்போது அமெரிக்காவின் 2 விமானந்தாங்கிக் கப்பல்கள் ஈரானிலிருந்து சற்று தொலைவில் நிறுத்தப்பட்டுள்ளன. ஈரானின் தாக்குதலை பலமாக எதிர்கொள்ள இவ்வாறு தயார் நிலையில் அமெரிக்கா இருப்பதாகவும் பேசப்படுகிறது.

# மெக்சிகோவின் போதைப்பொருள் கடத்தல் மன்னன் சுட்டுக் கொலை



மெக்சிகோவினால் தேடப்பட்டு வந்த மிக முக்கியமான போதைப்பொருள் கடத்தல் தலைவனும், 'ஜாலிஸ்கோ நியூ ஜெனரேஷன்' (CJNG) என்ற கடத்தல் கும்பலின் தலைவனுமான நெமேசியோ ஒசெகுவேரா செர்வாண்டஸ் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

எல் மென்சோஎன்று பரவலாக அறியப்படும் இவர் கொல்லப்பட்டதை அந் நாட்டு பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்த விரிவான விபரங்கள் வருமாறு:

மெக்சிகோவின் ஜாலிஸ்கோ மாநிலத்திலுள்ள தபால்பா நகரில் 'எல் மென்சோ' மறைந்திருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இராணுவத்தினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன் போது இராணுவத்தினருக்கும் போதைப்பொருள் கும்பலுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. இந்த மோதலில் எல் மென்சோவின் ஆதரவாளர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த எல் மென்சோ, மேலதிக சிகிச்சைக்காக தலைநகர் மெக்சிகோ சிட்டிக்கு கொண்டு செல்லப்படும் வழியில் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். இந்த விசேட தேடுதல் நடவடிக்கைக்கு அமெரிக்கா வழங்கிய புலனாய்வுத் தகவல்கள் பெரும் உதவியாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சுரேஷ் சலே கைது! 72 மணித்தியாலம் தடுப்பு!

அரச புலனாய்வுப் பிரிவு முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் 25 பெப் 2026 புதன்கிழமை பேலியகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான மீள் விசாரணைகளின் ஒரு கட்டமாகவே இந்த கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது தொடர்பான மேலதிக விபரங்கள் வெளியிடப்பட்டன மேற்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்த கருத்துத் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகக் கிடைத்துள்ள வலுவான சாட்சியங்களின் அடிப்படையிலேயே சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து நீண்டகால விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதால், மேலதிக தகவல்களை இப்போதைக்கு வெளியிட முடியாது' எனத் தெரிவித்தார்.

கைதுக்கான காரணத்தை உடனடியாக அறிவிக்காமல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமைக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.


அதற்கு பதிலளித்த சஜீவ மெதவத்த, 'அவரைக் கைது செய்யாமல் இருந்திருந்தால் தான் பொலிஸாருக்கு எதிராக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். பொலிஸார் தமது கடமையைச் சரியாகச் செய்துள்ளனர்' எனக் குறிப்பிட்டார். சுரேஷ் சலேவிடம் முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளின் ஊடாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னால் உள்ள 'மகா சூத்திரதாரி' தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த முடியும் என பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜாலிய சேனாரத்ன தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்தால் 3 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய முடியும். அதன் பின்னர் தேவைப்படின், சாட்சியங்களின் அடிப்படையில் தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்று மேலதிக காலம் தடுத்து வைக்கவும் சட்டத்தில் இடமுண்டு' என்றார். பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய மேலதிக தகவல்கள் உரிய நேரத்தில் வெளியிடப்படும் எனவும் பொலிஸார் இதன்போது உறுதியளித்தனர்.

2019ஏப்ரல் 21 அன்று சஹ்ரான் ஹாஷிம் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்த 10 தற்கொலைத் குண்டுத் தாக்குதல்களில் 273 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நௌபர் மௌலவி உள்ளிட்ட 25 பேருக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு தினசரி விசாரணை நடைபெற்று வருகின்றது.

இத்தாக்குதலுக்குப் பின்னால் அரசியல் சக்திகள் இருப்பதாக நீண்ட காலமாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, தற்போதைய அரசாங்கம் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியது. குறிப்பாக, பிரித்தானியாவின் 'சனல்-4' ஊடகம் வெளியிட்ட ஆவணப்படத்தில், சுரேஷ் சலே மற்றும் தவ்ஹீத் ஜமாத் உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு குறித்தும், ராஜபக்ஷவினரை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வர நாட்டில் பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கத் திட்ட மிட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது. பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தனின் முன்னாள் ஊடகப் பேச்சாளரும், தற்போது சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சமடைந்துள்ளவருமான அசாத் மௌலானா வழங்கிய தகவல்களே சுரேஷ் சலேவுக்கு எதிரான விசாரணை களில் திருப்புமுனையாக அமைந்தன. கடந்த காலங்களில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சமர்ப்பித்த இரகசிய விசாரணை அறிக்கைகளின் அடிப்படையிலும், புதிதாகக் கண்டறியப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலுமே இந்த அதிரடி கைது இடம்பெற்றுள்ளது. தற்போது சி.ஐ.டி வசம் உள்ள சுரேஷ் சலேவிடம் தாக்குதலின் பின்னாலுள்ள அரசியல் தொடர்புகள் குறித்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



## பணமோசடி வழக்கில் இருந்து யோக்ஷித்த ராஜபக்ஷாவின் பாட்டி டெய்சிக்கு மருத்துவ காரணங்களால் விடுதலை



பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து, யோஷித்த ராஜக்ஷவின் பாட்டியான டெய்சி பாரஸ்ட் என்பவரை விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் 25 பெப் 2026 புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது. டெய்சி பாரஸ்ட் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், கடந்த விசாரணைகளின் போது தமது கட்சிக்காரரர் வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளும் மனநிலையில் இல்லை என்பதை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பு நீதித்துறை மருத்துவ அதிகாரி மூலம் விசேட மனநல அறிக்கை ஒன்றை பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட குறித்த மருத்துவ அறிக்கையின்படி, பிரதிவாதி வழக்கு விசாரணைகளில் பங்கேற்கத் தேவையான மனஆரோக்கியத்துடன் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி, அவரை வழக்கிலிருந்து விடுவிக்க உத்தரவிட்டார். சுமார் 73 மில்லியன் ரூபா பெறுமதி யான சொத்துக்களைச் சட்டவிரோத மான முறையில் வருமானம் ஈட்டிய தன் மூலம் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்ததாக, யோஷித்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பாரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. டெய்சி பாரஸ்ட் விடுவிக்கப்பட்டாலும், இந்த வழக்கின் முதலாவது பிரதிவாதியான யோஷித்த ராஜபக்ஷவிற்கு எதிரான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார நீதிமன்றத்தில் தெரிவித்தார்.